ஏ.கே.வேலனின்

# எழுத்துக்கள்

- காவியக் கம்பன்
- இறைவன் சிரிக்கிறான்
- கண்ணன் கருணை (கீதையின் சாரம்)

ஏ. கே. வேலனின்

# எழுத்துக்கள்

**காவியக் கம்பன்**

**இறைவன் சிரிக்கிறான்**

**கண்ணன் கருணை**
(கீதையின் சாரம்)

## முன்னேட்டம்

வானுயர வளர்ந்து நிற்கும் இமயம்
பிறக்கு முன்னே பிறந்த பழங்குடி
இந்து மாக் கடல் விழுங்கு முன்னே
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கம்
தழைத்திருந்த லெமூரிய மாநிலப் பரப்பில்
வாழ்ந்திருந்த மனித குலத்தின் முதற்பதிப்பு
சிந்து வெளியில் கங்கைக் கரையில்
நைலின் ஓரத்தில் வால்காவின் தீரத்தில்
செழித்தெழுந்த கலைகளுக்குத் தாலேலோ
பாடிய
காவிரியின் மடியில் குடியிருந்த மூத்தகுடி
தமிழ்க் குலம் என்று தலை நிமிர்ந்துசொல்வேன்

மிருக நிலையில் இருந்து மேம்பட்ட மானிடன்
கண்ணால் குறித்து கையால் உரைத்த
காலம் தெளிந்து பையப் பைய
நாவால் ஒலித்து மொழியாய் வளர்த்த
முதல்மகன் தமிழ் மகன் என்றால் சரித்திரம்
மறுக்குமோ?

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றான்.
முன்னாளில் அவன் வாழ்ந்து காட்டிய வழி
முறையை
வள்ளுவர் வகுத்துக் காட்டினார் திருக்குறளாக
பின்னாளில் பழந்தமிழன் பாமரன் ஆனான்

பக்தி வெள்ளத்தில் பரவசப்பட்டான்
நாரணனுக்கு நாலாயிரம் தமிழ் என்றால்
நஞ்சுண்டனுக்குத் தேவாரம் பல்லாயிரம்
அண்டை அயலிருந்து வந்து கலந்தவர்.
கொண்டுவந்த தெய்வங்கள் கோடி கோடி
ஒன்றுபட்டதோ உறவுபட்டதோ
ஒருபெருஞ் சமுதாயம் உருவாயிற்று காண்
குறிஞ்சிக்கு ஒரு கிழவன் முருகன் என்பார்
அவன் இளமைக்கு அழகன் கருணைக்கு வள்ளல்
பாலைக்கு ஒருதெய்வம் கொற்றவை என்பார்
அவள் வெற்றித்திருமகள் வீரத்தின் ஒளி
விளக்கு
முல்லைக்கு ஒரு தேவன் மாயோன் என்பார்
சீருக்கும் சிறப்புக்கும் பெருமைக்கும் அவனே
பெருமாள்
மருதத்தின் தலைவன் வேந்தன் என்பார்
வேளாண்மைச் செல்வம் அவன் விளைவித்ததே
நெய்தல்நிலக் காவலன் வருணன் என்பார்
கடலுக்குக் காப்பு அவனே என்றிருந்த
இலக்கணமெல்லாம் தலைக்கன ஆனதோ

குமரனைக் கொற்றவை பெற்ற மகன் ஆக்கினர்
மாயோனை அவனுக்கு மாமனாக்கினர்
பிள்ளைக்குத் தந்தையாக சிவனைச் சொன்னார்
அந்த சிவனுக்குக் கொற்றவை மனைவியானாள்.
பின்னால்வந்த பிள்ளையார் பெரிய பிள்ளைஆனார்
இப்படிக்கு எத்தனை எத்தனையோ கற்பனைகள்
கடவுளென்ற சமுதாயக் கதைகளாயிற்று

எழுத்தாணி விளையாட ஏடு கொள்ளா
புராணங்கள்
தத்துவங்களை உள்ளடக்கித் தாளமிட்டன

இத்தனைக்கும் இடையில் பக்தி என்ற
படிக்கட்டில்
ஞான விளக்கெடுத்து தவக் கோலூன்றி
இலக்கியச் சோலையிலே கற்பனைத்தோகை
விரித்து
களிநடம் புரிந்தான் காவியக் கம்பன்
சரித்திர பின்னணியில் சாத்திர நிழலில்
இலக்கியச் சுவட்டில் ஏகே வேலன்
எழுதுகிறேன்
கவிகளில் பெரியோன் கம்பனுக்கு மேலில்லை.
நாயகரிற் பெரியோன் ராமனுக்கு மேலில்லை.
எழுத்தில் இனிமை தமிழுக்கு மேலில்லை.
கம்பனின் கழலடிபணிந்து
அவன் கதையைச் சொல்லுகிறேன்.

# காவியக் கம்பன்

## வாழ்த்துரை

குடகு மலை சிகரத்தில் குளிர்ந்த வனச் சாரலில்
கவேர முனிவன், தவமிருந்த குகையருகில்
குறிஞ்சி மகள் பெற்றெடுத்த சிற்றருவி
பிறந்த இடப் பெயரால் காவேரிஆனாளோ?
புகுந்த இடமெங்கும் சோலை விரிந்ததால்
காரணப் பேராக காவிரி யானாளோ?
பொன் விளையும் கன்னடத்து புனித மண்ணில்
புரண்டு வந்த படியால் பொன்னி யானாளோ
ஏமவதி அமராவதி கபினி பவானி
என்றுபல நதிகள் ஒன்று திரண்டு
பொங்கி வரும் போது கங்கைக்குத்
தங்கையவள்
பூமகளுக்கு இயற்கை அளித்த பெருஞ்செல்வம்
தமிழ்த்திரு நாட்டுக்கு வணங்கும் தெய்வம்
அன்னை காவேரி வாழிய வாழியவே!

தலையரங்கம் தலக்காடு கருவூர் உறையூர்
தஞ்சை பழையாறை பூம்புகார் நகரங்களில்
வல்லரசுகள் வளர்ந்திருந்த வரலாறு மிகப்
பெரிது
காவிரியின் இரு மருங்கும் சிவனும் திருமாலும்
கோயில் கொண்ட கோபுரங்கள் இன்றுமுண்டு

சைவம் மணக்க வைணவம் இனிக்க
புத்தம் சமணம் கமழக் கமழ
தமிழ் வளர்த்த காவிரி வாழியவே.

**வழிமுறை**

உரித்த புலியை தரித்தான் சங்கரன்.
உயிர்ப்புலியை வாகனமாய் வரித்தாள் சங்கரி
வரிப்புலியைக் கொடியுடையார் எங்கள்
சோழர்

விண்ணரசுக்குப் பரிந்து போர் முரசுகொட்டி
வாளொடு சென்று வாகை சூடி
தியாகர் எழுவரைப் பரிசு கொண்ட
முசுகுந்தன் எங்கள் சோழர்குல முன்னவன்

ஆரூரில் அதிர்ந்த மணிஓசைக்கு
அரசிளங் குமரன் வீதி விடங்கனை
தேர்க் காலில் அரைத்த மனுவும் ஒரு
சோழனே

ஒரு புறவின் உயிர் காக்க தன்தசைக்கொடுத்த
சிபிச் சக்கரவர்த்தி சோழர் குலத் தோன்றலே

பட்டினப்பாலைக்கு பாட்டுடைத் தலைவன்
காவிரிக்குகரை எடுத்து கல்லணை தேக்கிய
மாவளவன் கரிகாலன் மாண்புமிகு சோழன்

இலங்கை கொண்ட கோப்பர கேசரி
தஞ்சைக் கோயிலெடுத்த சரித்திரப்
புகழுடையான்
ராஜராஜன் சோழர் குல திலகமே

கங்கைக்கு அப்பால் வங்கத்தில் புகழ் நிறுத்திய
வீர ராஜேந்திரன் ஒருசோழ பூபதி
தில்லையில் பொன் வேய்ந்த இரண்டாம்
குலோத்துங்கன்
தொண்டர் புராணம், கண்ட புகழ்ச்
சோழனே

என்றின்ன வரலாற்று மாவீரர் வழி வந்தவன்
சோழர்மகள் வழிப்பேரன் முன்றும்
குலோத்துங்கன்
முடிகொண்ட சோழபுரம் என்னும் பழை
யாறை
அவனது இரண்டாம் தலைநகர், வட தளி
என்பார்.

செம்பியன் மாதேவி அவன்மனைத் தலைவி
புவன முழுதுடையாள் என்றும் சொல்லுவர்
கூத்தர் புகழேந்தி அவனவைக்குப் புலவர்
சடையப்ப வள்ளல் அவன்சபையில் பெரியவர்
அமராவதி அவன்குடிக்கு ஒருமகள் தமிழ்மகள்
கலிங்கத்து பரணிகொண்ட தலைமுறைக்கு
வேலனும் ஒருகாவியம் படைக்கின்றன்
வணக்கம்.

தலைமகள் அமராவதி காவலன் பெற்ற மகள்
தலைமகன் அம்பிகாபதி பாவலன் பெற்றமகன்
அம்பிகாபதிக்குத் தந்தை கம்பன்
அவர்அழுந்தூர், காளி கோயில் பூசாரி
காவிரிக்கு ஒருகிளை வீரசோழன்

தென்கரையில் நின்றவூர் தேரழுந்தூர்
ஆறை நகருக்கு கிழக்காக ஒரு காவதத்தில்
ஆமருவியப்பன் கோயில் கொண்ட திருத்தலம்
தில்லையில் கூத்தனுக்கு பொன்வேய்ந்த கூரை
சடையப்பன் குடியிருந்தது கதிர்வேய்ந்த
கூரை

தேரழுந்தூருக்கு வடக்கில் வளம்பெற்ற
சிற்றூர்
வழக்கில் கதிர்வேய் மங்கலம் என வழங்கினர்.
வடமொழியில் வலியகவி காளிதாஸன்
தென்மொழியில் பெரியகவி காளிக்கு
பூசாரி
கம்பனை மிஞ்சஒரு கொம்பனும் பிறக்கவில்லை.

**வழிபாடு**

ஊருக்கு வடகிழக்கில் ஆற்றுப் படுகையில்
நான்மாட வீடொன்று காளிக்குக் கோயில்
நாள்தோறும் உச்சிக்கு பூசை வைப்பான்
படையலுக்கு பொங்கல் பொங்குவான்
பக்திக்கு
உணர்வு பொங்கும் அவன் இதயத்திலே.
வழக்கம்போல் கம்பன் பூசைக்கு வந்தான்
கோயில் முற்றத்தில் உலையைப் பூட்டினன்
அலரியும் செம்பருத்தியும் தாழ்வரையில்
கொட்டினன்.
நாரெடுத்து தொடுத்தான் நாவசைந்து
துதித்தது.

பொற் கோட்டு இமவான் மகளே
புவனேஸ்வரி
அம்பிகே துர்கா அங்காள பரமேஸ்வரி
சங்கரி நந்தினி சவுந்தரி ராஜேஸ்வரி
ஓம் சக்தி பராசக்தி உமா மகேசுவரி
கங்கா பவானி கௌரி கௌமாரி
வான்மாரி பொய்ப்பினும் வரன்மாறி
பொய்க்கா
கருமாரித் தாயே காளியே கூளியே
ஆரணத்தின் பெரும் பொருளே நாரணர்க்கு
இளையவளே
ஓங்கார வடிவே ஆங்கார வல்லி
ஊங்கார தொனியே ரீங்கார வல்லி
கதிராய் நிலவாய் காய்கின்ற ஒளிச்சுடரே
காற்றாய் வெளியாய் கனலாய்ப் புனலாய்
மணலாய் மலர்ந்த சராசரமே
பெண்ணே நின்பெருமை பேசவல்லேன்
அல்லேன்
எனச்சொல்லும் பொருளும் தொடரத்
தொடர
உருகினான் உள்ளத்திரையில் உருவகப்
படுத்தினான்.
அதுபோது ஒருகிழவி அங்கே வந்தாள்
உலைபொங்கி வழியக் கண்டாள்
எரிந்த விறகை வெளியில் இழுத்தாள்
வழிந்த சோற்றை வழித்துச் சுவைத்தாள்
பொங்கலில் ஒருகல் உப்பு குறைகின்றதே

கம்பனே தொடுகறி உண்டோ எனக்
கேட்டாள்.
திடுக்கிட்டான் விழிப்புற்றான். யாரடி கிழமே
பூசைக்குரிய பொங்கலை எச்சில் படுத்தினை
என்றுஅவள் கையிலிருந்த கலயத்தைப்
பறித்தான்.
நான் கிழம் பழுத்து உதிரும் பருவம்
நீபழுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்க
வந்தேன்.
கிழவிக்கு வயிறு பெரிதோ வாயும் பெரிதோ
எங்கிருந்து வந்தனை எங்கு போகின்றனை?
கேளடா கருவூரிலிருந்து வந்தமகனே
காட்டூருக்குப் போகின்றேன், இடையில்
பாட்டூரில் உன்னையும் பார்த்தேன் என்றாள்
மெய்மறந்து அவள்ஒளி முகத்தைப்
பார்த்திருந்தான்.
பின்னர் அன்னையே பொங்கலில்லை. மன்னிக்க
என்றபடி மாலையுடன் கருவறைக்குச்
சென்றான்
அதிர்ச்சியினும் அதிர்ச்சி அவனை உலுக்கிற்று
காளியின் கரத்திலே பொங்கலைக் கண்டான்
உதட்டிலே தின்ற சுவடு தெரிந்தது.
தன்னை மறந்தான் அவள் தாளில் விழுந்தான்
தாரை தாரையாக கண்ணீர் பெருகிற்று.
தாயே தாயே என்று வாயும் புலம்பிற்று
அபயக்கரம் நீண்டு அவனை வருடிற்று
மாகாளித் தாயே மகாமாயை நீயே
மாரி என்றால் மழை என்பார்

மழை என்றால் ஈரம் என்பார்
ஈரமும் கருணையும் இன்றுகண்டேன்.
தாயே தடுத்தாட் கொள்ள வந்தனையோ
உமையே உருக்காட்டி மறைந்தனையே
அழுதான் சிரித்தான் ஆடினான் பாடினான்.

**ஆற்று வெள்ளம்**

உன்மத்த நடையில் வீடு சேர்ந்தான்
குடித்து வந்தானென்று கொதித்தாள் மனைவி
அன்றிரவு கடல்திரண்டு கார்மேகம் ஆனதோ
கறுத்து இருண்டு சோழமண்டலத்தை
சூழ்ந்ததோ
குமுறிற்று வானம்; கொட்டிற்று மழையோ
மழை
காவிரி கரைபுரண்டது வீரசோழன்
வெகுண்டது.
வெள்ளம் பெருகப் பெருக வேந்தனும்
வருந்தினான்
பயிர்கள் மூழ்கமூழ்க சடையப்பர்
தத்தளித்தார்.
படைமறவர் ஆற்றின் கரைகாத்து நின்றனர்
காளியை நினைத்து கம்பனும் குழம்பினான்.
ஆற்றுப் படுகையிலே என்ஆத்தாள்
இருக்கின்றாள்
அகிலம் காப்பவள் தன்னையும் காத்துக்
கொள்வாள்.
தவிப்பது மனிதபுத்தி என்றுஒருமனம்
சொல்லும்

காட்சி கொடுத்தவளை காற்றுக்கும் மழைக்கும்
விட்டுக் கொடுத்து வீட்டில் இருப்பது
ஆண்மையோ பக்தியோ என்றொருமனம்
கேட்கும்.
உணர்ச்சி வெள்ளமாயிற்று ஓடினான்
மனைவி தடுத்தாள் மகனும் மறித்தான்
தடம்தெரியாது தடுமாறிவிழுந்தும் எழுந்தும்
ஆத்தாள் கோயிலிருந்த ஆற்றங்கரை
சேர்ந்தான்
படிப்படியாய் வெள்ளம் படிக்கட்டேறிற்று.
மண்டபத்துக்குள்ளும் வெள்ளம் பாய்ந்தது
பதறினான் கம்பன் பதைத்தான் துடித்தான்
சீறி வந்த வெள்ளத்தின் சீற்றத்தை மீறி
செல்லக் குழந்தை போல் சிலையை அள்ளி
எடுத்து
மச்சுக்கு ஏறினான் மாடத்துக்குத் தாவினான்
கோபுரத்தின் உச்சிக்கே கொண்டு சென்றான்
பெருகி வந்த வெள்ளம் மேலும் பெருகி
கோபுரத்தைத் தொட்டது. குமுறினான்
கம்பன்
இதயம் துடித்தான். எரிமலையாக
வெடித்தான்.

"அன்னையே காவிரி, அடங்காப்பேய் ஆனாயோ
உயிர் வளர்த்த நீ, பயிர்வளர்த்த நீ
அனைத்தும் பாழாக்கும் வெறி கொண்டாயோ
பாவத்தைக் கழுவி புண்ணியத்தை அருளும்
புனிதவதி என்னும் பொன்னிமகள் நீதானோ?

உப்புக்கடலில் ஓடிக்கலந்த உன்னை
அன்னை என்று உலகம் அழைக்க
கரை கொடுத்து அணை எடுத்து
புகழ் கொடுத்த நன்றி மறந்தனையோ?
தாயொரு பிழைதான் பொறுப்பாள்
தண்ணீர் மூன்றுபிழை தாங்கும் என்ற
சான்றோர் வாக்கும் பொய் ஆனதோ
பொங்கி எழுந்தனையோ? பொறுமை
இழந்தனையோ
கன்னியழிந்தனையோ காவல் இழந்தனையோ
சீறிவரும் உனது சீற்றத்தையடக்க
கங்கையைச் சடைமுடித்த சங்கரன்
வேண்டுமோ?
சங்கத் தமிழ் மேல் ஆணை
காவிரியே நீ கரையடங்கி
நுரையடங்கி ஒடுங்குக ஒடுங்குகவே
கம்பன் சொன்னேன் காளியும் சொன்னாள்
அடங்குக அடங்குக ஆவேசம் அடங்குகவே
நாடு வணங்கும் நானும் வாழ்த்துவேன்
காவிரியே வாழியநீ வாழியவே!''
சீறிவந்த வெள்ளத்தின் சீற்றம் தணிந்தது
கரை கடந்த நிலைதணிந்து நடந்தாள் காவேரி.
கரைகாத்த காவலர்க்கு வியப்போ வியப்பு
வேந்தனுக்கு தாங்க ஒண்ணா மகிழ்ச்சி
சடையப்ப வள்ளல் உள்ளம் துள்ளினார்.
பள்ளத்திலிருந்த பயிரெல்லாம் நிமிர்ந்தன.
தார் வேந்தன் தேர்பறந்தது தேரழுந்தூர்
நோக்கி

கம்பனும் காளியும் கோபுரத்திலிருந்து
இறங்கினர்
கம்பர் இனிஒரு பூசாரி அல்ல
பூசைக்குரியவர் என்று போற்றினர்
வள்ளலும் கம்பரை வாரி அணைத்தார்
மன்னவன் மார்பில் புரண்ட மணியாரம்
கம்பர் பெருமகன் கழுத்தை அலங்கரித்தது.

**சோழன்**

"நான் இந்த புவிக்கு வேந்தன் ஆயினும்
என் ஆணை இயற்கையின் மேல்செல்லுவதில்லை.
இங்கே தமிழுக்கு இயற்கையும் பணியக்
கண்டேன்
கம்பர் பெருமகனே கவிஞர் குலதிலகமே
நீங்கள் பிறந்தது இந்த மண்ணுக்குப்பெருமை
தமிழுக்குச் சிறப்பு சரித்திரத்துக்குப் புகழ்
என் பேரவைக்குப் புலவராக அழைக்கிறேன்.

**கம்பர்**

"மன்னர் மன்னனே என்னை மன்னிக்க
அன்னையின் தொண்டுக்கே என்னை
ஆளாக்கினேன்
மற்றபடி பெருமை எதுவும் வேண்டிலேன்."

**சோழன்**

"தாமரைதண்ணீருக்குமேல் மலர்ந்திருப்பதே
அழகு
உள்ளே கிழங்காக இருப்பதில் உயர்வென்ன

உங்கள் பெரும்புலமை உலகத்துக்கு உரிமை ஒரு சிற்றூரில் தேங்குவதற்கு ஒப்பேன்.''

**கம்பர்**

''தங்கள் பேரவைக்கு கூத்தர் இருக்கின்றார்' அவரிலும் வலிய புலமை எனக்கில்லை.''

**சோழன்**

அவர்புலமைகற்றது, கேட்டது, ஆய்ந்தது. கம்பனுக்குக் கை வந்ததுகாளியின் திருவருள்.

**கம்பர்**

''ஆயிரம் சொல்லினும் என் ஆத்தாளை
நான்பிரியேன்.''

**சோழன்**

''வள்ளலே என் விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுங்கள்.''

**வள்ளல்**

தங்கள் மனம் போல ஒரு நாள் வரும்
அன்னையே மகனை அனுப்பி வைப்பாள்

**சோழன்**

வால்மீகியின் காலத்தில் நான் பிறக்கவில்லை
என்ற குறை தீர்ந்ததென்று நினைத்தேன்
தீரவில்லை

**வள்ளல்**

பொன்னி மன்னனே புரியவில்லை-
சொல்லுங்கள்
கம்பர் அதற்கு எப்படிப் பொறுப்பாவார்!

**சோழன்**

கோசலைச் செல்வனை மிதிலைச் செல்வியை
தமிழில் தந்தால் என் தாகம் தணியும்
என வேந்தனும் ஆர்வம் ததும்பக் கேட்டான்

**கம்பர்**

அது வடமொழி, பெருங்கடல் எனக்குப்
பயிற்சியில்லை
கோயிற் குறிப்பாட்டு பரம்பரை வழிவந்தது
உடுக்கடித்து கதை சொல்வது எங்களுக்கு
வழக்கம்
ஆதலின் ராமகதை நானும் பாடுவதோ
என மறுத்தற்கு மறுத்தார் சடையப்பர்

**வள்ளல்**

அனைத்து புலமையும் அவளுக்கு அரிச்சுவடி
நீர் எழுத்தாணி பிடித்தால் எழுத்தாக
வருவாள்
நானும் ஏடு திருத்துவேன் எழுத்தாணி
தீட்டுவேன்
மன்னவனே மனமுவந்துச் சொல்லுகிறேன்.

கம்பர் எழுதும் பொறுப்பை நான் ஏற்கிறேன்
அதற்கு மேல் மறுப்பில்லை அவள் சித்தம்
என்றார்
காற்று அசைத்ததோ காளியின் கருணையோ
கலகலவென்று மணிஓசை கேட்டது
கம்பரின் மனைவிக்கு பெருமை பிடிபடவில்லை.
கொண்டவனை குறைத்து மதித்தற்கு
கொதித்தற்கு

வருந்தினுள். அவள்மனம் மன்னிப்புக்
கோரிய
ஆதித்த உவச்சனுக்கு மகிழ்ச்சி. கம்பனே
மகனுகத் தந்த தெய்வத்தை வாழ்த்தினுன்
கம்பன் செய்து வந்த காளி பூசை
தொழிலெனத் தொடர்ந்தது.தொடர்ந்து
தவமாயிற்று
முன்னேப் புலவர்களின் உள்ளத்தில்
ஊற்றெடுத்த
புலமை வெள்ளம் பெருக்கெடுத்து
திரண்டதோ
வெள்ளேத் தாமரையில் வீற்றிருந்த கலேமகள்
கம்பனின் உள்ளக் கமலத்தில் இடம்
பிடித்தாளோ
வடமொழி வழக்கில் இல்லேஎன்று வருந்திய
வால்மீகி கம்பனுய் வந்து பிறந்தானே?
பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமகனே
தமிழ்க் கடலில் தொட்டிலிட்டுத் தாலாட்ட
சங்கத் தமிழும் சந்தத் தமிழும்
வந்தனே செய்தனவோ? வாழியவேகம்பர்.

புதுவைச் சங்கரன் தலேமகன் சரராமன்
வெண்ணே நல்லூர் சடையன் என்பார்
கொடையில் கர்ணன் அறத்தில் தருமன்
தமிழில் தார்வேந்தனே மீறிய கீர்த்தி
புகழில் வள்ளல் எழுவரை மிஞ்சினுன்.
குலோத்துங்கன் தமிழ்நெஞ்சம்;வாழ்த்திற்று
அரசியலோ சடையனே தனிப்புகழுக்கு
இடமின்றி

தன்னவையில் முன்னவனுய் இருக்கவைத்தது
இந்நிலையில் கம்பனுக்குளழுதும் பொறுப்பு

சோழனுக்கு வீரபாண்டியன்மேல் வெறுப்பு
படை நடந்து பாண்டியை அதிர அடித்தது.
பாண்டியனுக்கு இனியன் இலங்கை
பராக்கிரமன்
பஞ்சம் அவன் சிங்களத் தீவினை தின்றது.
இலங்கையர் பசிக்கு இரங்கினுன் சடையன்
ஆயிரம் தோணிகளில் அரிசி கடல் கடந்தது
ஆழினுர் பசிப்பிணி. ஆற்றினுர் நன்றி
வெண்ணைச் சடையன் தன்னை மீறினு னென்று
வெற்றி கொண்டு மீண்ட வேந்தன்
சினந்தான்.

கம்பன்

இங்கிருந்து குடிசென்று யாழ்ப் பாணவர்
ஆனவர்
பசிப்பிணிக்கு மடிவதைபொறுப்பதோ
பொறுப்பு
ஐந்து பாண்டவரும் நூறு கவுரவரும்
அமர்க் களத்தில் மோதி நின்றபோது
இருதரப்புக்கும் பெருஞ்சோறு படைத்தான்
உதியன் சேரலாதன் என்கின்றது புறநானூறு
மதுரைப் போர்க்களத்தில் சோழன்நின்ற
போது
தஞ்சை நெற்களத்தில் சடையன்
நின்றிருந்தான்
பசிஎன்று பதைத்து சிங்களத்தூது வந்தது.

குலோத்துங்கன் இருந்திருந்தால் சோழனின்
தகுதிக்கு
பதினாயிரம் படகில் அரிசிசென்றிருக்கும்
பாட்டன் அருள்மொழி குடியமர்த்திய
பரம்பரையை
பகைவனுக்கு நண்பன் பராக்கிரமன்
என்பதால்
சோழன் பட்டினி போட்டிருக்க மாட்டான்
சடையரை பாராட்டினேன் ஏர் எழுபதாக

''உழுங் குலத்தில் பிறந்தாரே உலகுய்யப்
பிறந்தார்
''ஏரடிக்கும் சிறுகோலே செங்கோலை
நடத்துங்கோல்
''வேந்தர் களத்தில் வெல்வதுண்டு
தோற்பதுண்டு
''உழவர் களத்தில் இரப்பவரும்
தோற்பதில்லை

என்று தொடர்ந்த ஏர் எழுபதின்
கருத்துரைக்கு
வேந்தன் வியந்தான். சடையனை வாழ்த்தினான்
கம்பன் திறமையை கூத்தனும் மெச்சினான்

**சோழன்**

இராமகதை எதுவரை வளர்ந்திருக்கிறது
சுவைப்பதற்கு ஒரு கவிதை சொல்லுக
என்றான்

கம்பர்

''குமுதன் இட்ட குலவரை கூத்தரில்
திமிதம் இட்டுத் திரியும் திரைகடல்
தமிதம் ஊர் புக வானவர் துள்ளினர்
அமுதம் இன்னும் எழும் எனும் ஆசையால்.''

என்று பாடினர் வேந்தன் ரசித்தான்

குணவீரர்

பாற் கடலை கடைந்த பழங் கதைக்கு
புதிய மெருகு இந்தகருத்தோவியம்.
கடலமுதை கண்டவர் வானவர் தானவர்
கம்பன் சொல்லமுதில் இன்றுநாம்
திளைத்தோம்

கூத்தர்

கரும்பின் சுவைக்குக் கணுவும் தடைஎன்பார்
கம்பன் பாட்டில் சுவையுண்டு ஆயினும் துமி
என்றபதம் எந்த நிகண்டில் உள்ளதோ

கம்பர்

நிகண்டுகளும் புலவர்களின் வார்த்தைத்
தொகுப்பே
வழக்கில் இருப்பதை எடுத்தாள்வது தவறே

கூத்தர்

வழக்கென்பது வடக்கிலா தெற்கிலா எங்கோ

கம்பர்

எழுந்து வாருங்கள் இப்போதே கேட்கலாம்

நடந்தார் கம்பர் தொடர்ந்தான் சோழன்
கூத்தர் குணவீரர் நல்லூர்ச் சடையன்

வேந்தனுக்கு நிழலாயினர் வீதிகள் கடந்தன.
ஊர்க் கோடியில் ஒருகுடில் கன்றுகுரல்
கொடுத்தது
உள்வீட்டில் ஆயா மத்திட்டுக் கடைந்தாள்
செல்லப் பேரர்கள் வெண்ணெக்குச் சூழ்ந்தனர்
நகருங்கள் துமிதெரிக்கும் துமிதெரிக்கும்
என்றாள்
முகத்தில் தெரித்தால் முத்துப் போலிருக்கும்
ஆடையில் தெரித்தால் அழுக்குப் படியும்
செல்லங்களேச் சுவைக்க வரும் எறும்புகடிக்கும்
நகருங்கள் என்றாள்—நகர்வலம் வந்த
கம்பர் புன்னகை பூத்தார். கூத்தரின்
விழிகளில் ஆயிரம் கேள்விக்குறிகள்
வேந்தனுக்குப் புருவம் வியப்பில் உயர்ந்தது

**கூத்தர்**

"மன்னு—கவிராட்சசன் கவுடப்புலவன்
ஈட்டி எழுபது எழுதிய கூத்தன்
இறந்தான் என்று இரங்கல் பாடுங்கள்
மூன்றும் குலோத்துங்கனேமுதற்
குலோத்துங்கனுக்கும்
நானே ஆசான். முது பெரும் புலவன்
இன்று கம்பனுக்கு இளேத்தேன் இளேத்தேன்."

**கம்பர்**

"பெருந்தகையே இது என்ன பேச்சு.
புரியவில்லை
துடுக்காக ஏதும் சொல்லியிருந்தால்
மன்னிக்க."

கூத்தர்

''துடுக்கு உன் நடத்தையில் இல்லை கம்பா''
மனுக்குற்றச் சோழன் ''என்
நடத்தையிலோ?'' என்றான்

கூத்தர்

''இல்லை வேந்தே, மத்துருட்டிய ஆயமகள்
இடையர் வீட்டுக் கிழவியல்ல
ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
எனக்கருளும் தெய்வம் நான் வணங்கும்
கலைமகள்
கம்பனுக்கு பணிமகள் ஆனாள் பரிதாபம்
இதற்குப் பின்னும் இருப்பதோ நானென்றான்

ஆயன் குடிலும் ஆயாளும் காணவில்லை
வேந்தன் கம்பனுக்கு வந்தனை செய்தான்
முழுக் காவியம் என்று கேட்கலாம் எனக்
கேட்டான்.

விரைவில் அரங்கேற்றுவோம் என்றார்
சடையர்

மன்னவன் சூழலுடன் மாளிகை திரும்பினான்
வெண்ணை நல்லூர் வள்ளலுக்கு மிரட்சி
கம்பர் அவர் கலவரத்தை கண்டு சிரித்தார்

கம்பர்

எந்தையே ஏர் எழுபதின் பாட்டுடைத்
தந்தையே
இன்னும் முதற் பாட்டுத் துவங்கவில்லை.
இடையில் ஒரு பாட்டு அதிலும் புதுப்பதம்
காத்தவள் அன்னை இருக்கின்றாள் கவலைஏன்

எழுத்தாணி பிடிப்பதே என் பொறுப்பு
எழுத்...
ராமனைக் கொண்டு நிறுத்துவது அவளன்...
குருத்தோலை திருத்தி கூர் எழுத்தாணி வடி...
தேர் அழுந்தூர் சந்நிதியில் விடுத்துச்
செல்லு...
சரராமனே—தசரதராமன் வருவான்
அன்னைபிராட்டியை அனுமனை சந்திப்பே...
வால்மீகியின் திருவருளால் வண்ணத் தமி...
சித்திரம...

அது நேரம் அந்தி விளக்கேற்றினன்
அம்பிகா...
ஆலய வாசலுக்கு ரதம் வந்து சேர்ந்தது.
தந்தைக்குத் தாள் வணங்கினன் தலைதெறி...
ஓடி...
அன்னைக்குச் சொன்னன். ஆதித்த உவச்ச...
கம்பனின் நலம்கேட்டு களிப்பில் மிதந்தா...
முனை முறியாத முள்ளரிசிச் சோறு கிளறி...
அவரைக் கத்திரி அவியல் பொரியலாயிற்று.
முருங்கைப் பூரசம் மூக்கைத் துளைத்தது.
கட்டித் தயிரை வெட்டிஎடுத்தாள்..
சிவந்த வட்டம் நெற்றிப் பொட்டாக
நெறிந்த குழலை நீவி விட்டாள்
நெடிய கூந்தலை அள்ளி முடித்தாள்
அன்னக் கூடை இடுப்பில் ஏற
இடந்தோள் துடித்தது. கமலவல்லி நடந்...
கால்கள் அவளைக் காளி கோயிலில் நிறுத்தி...

அங்கே கம்பனில்லை. கணவனில்லை. கவிஞன்
இருந்தான்.
அவன் கரத்தில் எழுத்தாணி எழுதிஎழுதி
பழுத்திருந்தது.
திரு விளக்கின் ஒளிச்சுடரை தூண்டி
விட்டாள்
எரியும் பந்தத்துக்கு எண்ணெயிட்டாள்
அருகிலமர்ந்தாள் அப்போதும் அவனில்லை.
சிந்தனை சிறகடித்து எங்கோ பறந்திருந்தான்
சிதறிக் கிடந்த ஏடுகளை அடுக்கினாள்.
இயற்றிக் கிடந்த கவிதைகள் சிரித்தன.
இராமகதை பிறந்த கதையைக் கண்டாள்
காவியச் சோலையிலே கமலவல்லி புகுந்தாள்

**கதை பிறந்தது**

விடுகின்ற மூச்செல்லாம் நமோ நாராயணாய
கூட்டுகின்ற சுதி எல்லாம் நமோ நாராயணாய
என்றுலகை வலம் வரும் நாரத முனிவன்
வால்மீகியின் தவஞானக் குடிலுக்கு வந்தார்.
வந்தனை வழி பாடு முடிந்தபின்னர்
ஞானிகளின் பேச்சில் ஒரு கேள்வி பிறந்தது.
சகல குணங்களும் பொருந்திய சான்றோன்
சரித்திர நாயகன் வணக்கத்துக்குரியவன்
மனிதப் பிறப்பில் கண்டதுண்டோ என
வினயமுடன் வால்மீகி நாரதரை வினவினார்

**நாரதர்**

தவத்தில் வலியவர் உன்னைப்போல் பலருண்டு
தவறு பொறுப்பதில்லை. தனித்து ஒதுங்குவார்

ஞானியரோ மிகப் பெரியர் ஞாலத்தில்
கலப்பதில்லை.
யோகியரைச் சொன்னால் இறைவனே ஆவார்.
மற்றபடி யானறிந்தவரை சொல்லுகின்றேன்
இமயத்தின் சிகரத்தில் ஈயம் உருகியதோ
வெள்ளிக் குழம்பு பொங்கி வழிந்ததோ
வெண்ணிலவு பனியாய்க்கரைந்து உருகியதோ
அருவிகள் திரண்டு ஆறாய்ப் பெருக்கெடுத்து
கங்கை என்ற பெயர்கொண்டு நடந்தது.
சரயு யமுனையும் அதனுடன் கலந்தது.
சரயுநதி தீரத்துக்கு சரித்திரப்பேர் கோசலம்
அதனை ஆண்டவர்களில் ஆண்டவன் என்பேன்
தூய்மையில் நெருப்பானவன் துணிவில்
புயலானவன்
கீர்த்தியில் கதிரவன் கிளர்ச்சியில் சந்திரன்
பொறுமையில்பூமி புனிதத்தில் கங்கை.
உறுதியில் இமயம் உயர்வினில் நீலவான்
சிந்தனையில் ஆழ்கடல் சீற்றத்தில் வேங்கை
அறிவினில் தேவகுரு ஆற்றலில் இந்திரன்
தருமத்தின் ரகசியம் தெளிவாகத் தெரிந்தவன்
சத்தியம் அன்றிவேறு தெரியாதவன்
சினத்தை வென்றவன் அழுக்காறு
அவனறியாதது
புலன்கள் அடக்கம் புத்தி அவன் கைவசம்
சுக துக்கம் இரண்டிலும் ஒரேசித்தம்
ராஜநீதி முற்றும் கற்றவன்.
அகத்திலும் புறத்திலும் பகையற்றவன்
அழகினில் மன்மதன் அருளினில் திருமுருகன்

அடைக்கலம் ஆனவர்க்குக் கவசம் ஆனவன்
இல்லை என்றவர்க்கு இல்லை என்ஞதவன்.
இன்னல் புரிந்தவர்க்கும் நன்மையானவன்
பெற்றவர்க்கு இனியன் பெரியவர்க்கு
நல்லோன்

எதிலும் சமநோக்கு எதிரிக்கும் ரட்சகன்
அவனுக்கு நிகர் அவனே ஆவான்.
எடுத்துக் காட்ட இனியொருவன்
பிறக்கவில்லை.

கல்யாண குணங்களுக்கும் காட்சி அவனே
ரகு வம்ச குலதிலகன் ராஜா ராமன்
தசரத ராமன் ஜெய ஜெய ராமன்
சீலத்தில் பெரியவன் கோசலைச் செல்வன் அறிக

வால்மீகி

கொள்கையில் பெரியோன் குணநலம்
கேட்டேன்

வாழ்க ராமன் என்று வாழ்த்தினுன் வால்மீகி.

நாரதன்

நடந்ததை நாரதன் சொல்லுகின்றேன்
இனி நடப்பதை உன் ஞானம் சொல்லித் தரும்
யுகத்துக்கு யுகம் தொடர்ந்து செல்ல
எழுத்தினில் நிறுத்து இலக்கியம் ஆவான்

என்றிருந்த ஏடுகளைத் தொடர்ந்தாள்
சுந்தர காண்டம் அவள் சிந்தையைத்
தொட்டது.

அசோக வனத்தில் அன்னையைக் கண்டாள்.
அழுது அழுது அற்ற குளமான கண்கள்

தொழுது தொழுது துவண்டு விட்ட கரங்கள்
சிவதனுசை முறித்து சீதாபதியானவனை
நினைந்து நினைந்து இளைத்த திருமேனி
வனத்தில் மலர்கள் சொரிந்த மகரந்தம்
மஞ்சள் நிறத்தில் மகிமை படுத்தியதோ?
கற்புக் கனலில் கனிந்து கனிந்து
எழுதிக் கலைத்த சித்திரம் போன்றிருந்தவளை
கம்பனின் எழுத்து கண்ணாடிபோல்
காட்டிற்று.
இரக்கம் என்ற உணர்வில்லா அரக்கன்
வைதேகி இருந்த வனத்துக்கு வந்தான்
மதங் கொண்ட யானை மானின் கன்றை
மருவ அழைத்த வேதனை எழுதற்கரிது.
துரும்பு ஒன்றினை இடையில் போட்டாள்
சீதை

கள்ள மனத்தவனே, கள்ளின் வெறியனே
எள்ளிருக்க இடமின்றி சல்லடைக் கண்ணாக
உன் நெஞ்சைத் துளைக்குமடா ராமபாணம்
உனக்கு மகளிருந்து மற்றொருவன் கடத்தினால்
மனது பொறுக்குமோ மானத்துக்கு விலை
இல்லையோ!!
தவத்துக்கு நின்றவளை தவற்றுக்கு
அழைக்கின்றாய்
சவந்தின்னும் கழுகே சாகத் துணிந்தனையோ
தண்டக வனத்தில் தாடகை மாண்டாள்
ஜனஸ்தானத்தில் கரனும் இறந்தான்
கள்ள வேடமிட்டு என்னைக் கவர்ந்தது

ஆண்மையோ வீரமோ ஆணவமோ நீ
மாள்வாய்
பிறன்மனை நோக்காத பேராண்மை
உனக்கில்லை.
என் கண்ணீர் இலங்கையை எரிக்கும்
நெருப்படா.

வார்த்தைகள் எரிமலையாகச் சிதறின.
வெட்கம் என்ற உணர்வறியா மூர்க்கன்
அவள் வேதனையைச் சுவைத்தான் ரசித்தான்

ராவணன்:
கூவும் குயிலுக்கு கொக்கரிக்க முடியுமோ?
வேங்கைக்கு வெள்ளாடு இரை என்பது
இயற்கை
எனக்கு நீ இணங்குவது தவிர்க்க முடியாதது.
இந்திரன் உலகும் எனக்கு அடிமை
அரம்பை ஊர்வசி என் ஆடல் மகளிர்
நவ கோள்கள் நான் மிதிக்கும் படிகட்டு
பழிக்குப் பழியாக உனைக் கொண்டு வந்தேன்
ஆயினும் மலர் கொய்ய நளினம் வேண்டும்
மங்கையர் மனம் பறிக்க இங்கிதம் வேண்டும்
என்பதால் உன்னை இதுவரை பொறுத்தேன்
இனியும் இருதிங்கள் அவகாசம் தருகின்றேன்
இலங்கை அரியணையில் இடமுண்டு
வருகின்றேன்

என்றே வெந்தபுண்ணில் வேலிட்டுப் போனான்
ஆடிக் காற்றில் அறுந்த கொடியென

கோடை வெப்பத்தில் உதிர்ந்த மலரென
தலை சுழலச் சுழல தரையில் நழுவினள்
மரக்கிளையில் இருந்த மாருதி குமுறினன்
உருகி உருகி உருக் குலைந்தவளுக்கு
ஆறுதல் கூற முன் அறிமுகம் இல்லை.
ஆயினும் அவளைத் தேற்றுவதற்கு ஒரேவழி.
ராமநாமம் என்பது தெரிந்தான்
ஒன்பது இலக்கணமும் உணர்ந்த அனுமன்
கல்லா மழலை கனிந்து கனிந்து
காற்றில் கரைந்து வந்தோ?
ராம, ராம, ராமாவோ என்ற
மதுரமொழி அவள் செவிகுளிரச் சேர்ந்தது

**அனுமன்**

கோசலைச் செல்வன் கோதண்ட ராமன்
தாசரதி என்பார் தசரத ராமன்
ஜனகன் மருகன் ஜானகிராமன்
கவுசிக வனத்தில் கல்லாகி விட்டவளை
பெண்ணாக்கித் தந்த பிரபு ராமன்
பரசுராமன் தனுசை வளைத்து
தவத்தை பறித்த தனுர் வீர ராமன்
தந்தை சொல் மீக்க மந்திரமில்லை என்று
மணிமுடியை புறக்கணித்து மரவுரி தரித்து
கானகம் சென்ற காகுத்தன் ராமன்
ஏழைப்படகோட்டி குகனை இனிய
தம்பியரில் ஒருவனாக தரித்த ராமன்
பரத நம்பிக்கு பாதுகாவலாக
பாதுகையளித்த பட்டாபிரான்

நஞ்சினும் கொடிய நங்கைசூர்ப்பனகை
விரித்த வலையறுத்த வரிசிலை ராமன்
கரனுடன் பெரும்படை வளைத்தபோது
தனியொருவனாய்ச் சரமழை பொழிந்த ராமன்

மாய்வதற்கென்றே வந்த மாரீசனை
மாயமான் என்று துரத்தினையே ராமா
அன்பிலே பெரிய அன்னை வைதேகியை
இழந்து மனம் இடிந்து துடித்தனையே ராமா
வானிலே பறந்து புள்ளினத்தை முன்னழைத்து
என்னுயிர்த் தலைவி ஜானகி எங்கே?
வனத்தில் திரிகின்ற மிருகங்களைப் பார்த்து
மானே நீ மருளக் கற்றுக் கொடுத்தவளை
மயிலே உன் அழகுக்குச் சாயல் கொடுத்தவளை
குயிலே உன் குரலுக்கு இனிமை கொடுத்தவளை
என்னிலே பாதி என்னருமைத் துணைவியை
ஜனகன் மகளை கண்டீரோ பார்த்தீரோ
அருவிகளே குன்றுகளே அடர்ந்த பூங்காடே
உழுபடையின் சாலிலே உதித்த சீதை
எனையேன் பிரிந்தாள் கேட்டீரோ என்று
குன்றுகளும் எதிரொலிக்கக் கூவிய ராமா
தென்புலத்து மண்ணை புனிதப் படுத்த
தேவியைத் தேடித் தேடியலைந்தனையே
அழகு பிள்ளை அங்கதனை அமர்த்த
இலங்கையர் கோனை வாலில் சுழற்றி
தொட்டிலுக்கு மேல் தொட்டிலிட்ட
வானர வேந்தன் வாலியைக் கொன்று
அவன் தம்பிக்கு அரசளித்தான் ரகு வீரன்,

நாலு திசையிலும் நாயகியைத் தேடுகின்றார்
தென் திசைக்கு வந்தவரில் நானொருவன்
அஞ்சனைக் குமரன் ஆஞ்ச நேயன்
வாயு மைந்தன் வானர வீரன்
ஆணையில் வலிய சுக்ரீவனுக்கு அமைச்சன்
அன்னையைக் கண்டேன் அனுமன் என் பேர்.
ராம தூதன் நான் ராம தூதன்
தெரிந்து கொண்டதைச் சொன்னேன்
தெரிந்தவள் நீ.

வார்த்தைகள் ஒவ்வொன்றும் அமுதம் ஆயின
எழுத்துக் கெழுத்து ராமனைப் பார்த்தாள்.
இறந்து கொண்டிருந்தவள் பிழைத்து
எழுந்தாள்.
தன் உணர்வுக்கு அவள் வந்த போது.
கள் வெறியில் அரக்கியர் உறங்கிக் கிடந்தனர்
மாருதி ஒரு சிறு குரங்காகத் தெரிந்தான்.
தன்னை வளர்த்து அன்னை முன் வந்தான்
தாளில் விழுந்தான் தாயே என்றெழுந்தான்

**அனுமன்**

வானாள வல்லவன் கானாள வந்த கதையில்
தொண்டன் நான் தூதுவனும் ஆனேன்
இதோ அண்ணலின் கணையாழி எனத்
தந்தான்
கண்களில் ஒற்றினாள். கணவனைக் கண்டாள்.
மெய் சிலிர்த்தாள். மிதிலையில் ராமன்
வில் முறித்த காட்சி கண்ணில் தெரிந்தது.
சீதையின் மனம் சிறகடித்துப் பறந்தது

ராம பிரான் தடந் தோளில் கிடந்தாள்
அனுமனும் பக்தியில் ஆழ்ந்து நின்றான்

வைதேகி நினைவுக்கு வந்தாள் நினைத்தாள்
அனுமனின் வார்த்தைகள் அனைத்தும்
இனித்தன.

நெடுநாள் உணர்வுகள் நெஞ்சில்
பளிச்சிட்டதோ
ஆர்வத்தின் தோற்றமோ அனுமான் வருகை
அல்லால் இதுவும் அரக்கர் மாயமோ
மாருதியை மனக்கலக்கத்தோடு பார்த்தாள்.
குத்து விளக்கைக் குன்றின் மேலிட்டால்
காற்றுக்கு நடுங்காதோ கலவரப் படுவ
தியற்கை
பல்லில்லை நகமில்லை பசியில்லை என்பதால்
புலியின் கூண்டுக்குள் புள்ளிமான் வாழுமோ?
வேங்கையின் நாற்றமே மானைக் கொல்லும்
இங்கே சீதை பிழைத்திருந்தாள் திருவருள்.
நன்கு உணர்ந்த அனுமன் நலம் பல
சொன்னான்.
வாழ்கின்றான் ராமன். வருகின்றான்
படையோடு
என்பதற்கு மகிழ்வாள். இடந்தோள் துடிக்கும்
வருந்துகின்றான் ராமன் வனமெல்லாம்
திரிகின்றான்
என்பதற்கு அழுவாள் துயரத்தில் மூழ்குவாள்
ஆற்றுவதெப்படியோ அலமந்தான்
அனுமந்தன்

**அனுமன்**

சிறுகுரங்கு நான் நெடுங்கடலைத் தாண்டினேன்
குமுதன் என்றொருவன் குலவரையைப்
பறித்தெறிவான்
நீலன் நினைத்தால் நெடுங்கடல் சிற்றோடை
அங்கதன் அறிந்திருந்தால் அசோகவனத்தை
அண்ணலுக்கு முன் பெயர்த்து
வைத்திருப்பான்.
இளைய பெருமாள் உங்களைச் சேவித்திருப்பார்
ஜாம்பவான் கொதித்தால் சராசரத்தை
அசைப்பார்
சுக்ரீவன் ஆணைக்கு முன்னால் இலங்கையும்
அரக்கரும் இலந்தைப் பழமாக உதிர்வார்கள்.
ராமனின் ஆற்றலையும் அறிந்தவரைச்
சொல்லுகின்றேன்.
கையில் கௌசிகனின் வேள்வி காத்து
கால் விரல் கவுதமனின் மனையாளைத் தந்தது.
கருணையினால் என் குலத்தலைவனுக்கு
அரசளித்தான்
பொறுமையினால் இவ்வுலகம் பிழைத்
திருக்கின்றது
வெகுண்டிருந்தால் ஒரு பிரளயம்
மூண்டிருக்கும்
தாயே நான் அறிந்தது கொஞ்சம்
தாங்கள் அறிவுறுத்த வேண்டியது அதிகம்
என்று விநயத்துடன் தலை வணங்கினான்

சீதை

வாங்கியது கடனல்ல. வார்த்தையே கடன்.
தன்னரசை தாரை வார்த்துக் கொடுத்து
வட்டிக் கடனுக்கு கட்டியவளை விற்று
செங்கோலிருந்த கரத்தில் சுடுகோலேந்தினன்
அயோத்திக்கு அரசன் அரிச்சந்திரன் என்பார்
அவன்வழி வந்த பேரன் ராமச்சந்திரன்
சம்பரன் போரில் தசரத மன்னர்
பிள்ளைகளே பிறவாத ஒரு காலத்தில்
இளையவளை மகிழ்விக்க நின் பிள்ளைக்கே முடி
என்றார்
பின்னவனாய்ப் பிறந்த அந்தப் பிள்ளை
மறுத்தான்
தந்தையே தந்த வரத்தை வெறுத்தார்.
ஆயினும் வம்சத்தின் வார்த்தைபெரிது என்று
தாரத்தை இழந்தவன் தாரக ராமன்.
மகரிஷி ஜனகனுக்கு மகளாகப் பிறந்தேன்
மாமியரும் என்னை மகளாக வளர்த்தார்
எனக்கும் ஒரு மானை வளர்க்க ஆசை
ஆசை தீது என்பதை அறிவுறுத்த
வந்த கேடோ பெரிதினும் பெரிது.
மிதிலையில் மாலையிட்ட நாள் முதலாய்
வல்லரக்கன் எனை சிறை எடுத்த நாள் வரை
சுகத்திலிருந்தேன். சொர்க்கம்
என்னோடிருந்தது.
நரகத்தின் உணர்வை நானறியவோ
தெய்வம் தண்டித்தது தீயில் வேகின்றேன்.
பரதன் பாட்டன் வீடு செல்லாதிருந்தால்

கேகயன் மகள் அடம்பிடித்திருக்க மாட்டாள்
பிரிவின் துயரம் பெரியவரைக்
கொன்றிருக்காது
கலைமகள் ஒருத்தியே வெள்ளை உடுத்துவாள்
அயோத்தியின் அரசிகள் மூவர்
கலைமகளாயினர்
இளைய பெருமாளை இகழ்ந்தேன் அதற்கு
நினைய முடியாத துயரம் சுமக்கின்றேன்
பாத்திர மறிந்து பிச்சையிடவில்லை.
பகல் வேடக்காரன் என்னை கொள்ளை
யிட்டான்
என் தலைவன் நினைவில் இன்னும் உயிர்
இருக்கின்றது
வனத்திலொரு நாள் என் மடியில்
அயர்ந்திருந்தான்
காக்கை வடிவிலொரு மூர்க்கன் சயந்தன்
என் மனத்தைப் புண்படுத்தினான். விழித்தான்
கிள்ளி ஒரு புல்லை போட்டார் ஏழுலகும்
ஓட ஓட துரத்திற்று. சரண் என்றான்
மன்னித்தான்
சரத்துக்கு ராமன் என்பது சரித்திரம்
சராசரத்துக்கும் தலைவன் என்பது சாத்திரம்
அவன் தலைவி நான் வேதனைக்குசித்திரம்.
இலங்கையில் இன்று செத்துக்
கொண்டிருக்கிறேன்

**அனுமன்**

''இல்லை தாயே—தருமத்துக்குச் சாவில்லை
சத்தியம் ஒரு போதும் சாவதே இல்லை.

தெய்வ சக்தியும் வீணுகப் போவதில்லை.
எடுத்த பிறப்பின் இயற்கைக்கு ஏற்ப
வருத்தமும் உன்னை வருத்துகின்றதம்மா
நின் கண்ணில் வடிகின்றது நீரல்ல நெருப்பு.
நின் மொழியில் வருகின்றது சொல்லல்ல
சுடுசரம்
இலங்கை என்ன ஈரேழுலகும் பெரிதோ
விதிவருத்த நேரம் அரக்கனுக்கு வரவில்லை.
அதனல் கொடு மனத்தவன் இன்னும்
இருக்கின்ருன்
இலங்கை எரியவில்லை. இன்று எரியப்
போகின்றது.
நின் நெறியும் நின் தவக்கனலால் என் தாயே.
அன்னையைக் கண்டதற்கு அடையாளம்
கொடுங்கள்
அண்ணலைக் காண்பேன் அயோத்தி
காணுவீர்.
அந்த நாளும் விரைந்து வருகின்றது
அரியணையை அனுமன் தாங்குவேன் அங்கதன்
கணை வாள் பற்ற உடன் பிறந்த பரதன்
வெண் கொற்றக் குடைபிடிப்பான் பின்னவர்
இருவரும்
கவரி வீச கவிஞர் வாழ்த்துவார்
வசிட்ட மாமுனி மணிமுடி சூட்டுவான்
என்றின்னபல நல்லுரை ஆற்றிஞன்
தேறிஞள் தெளிந்தாள். சிந்தை குளிர்ந்தாள்.
சூடாமணியும் சாகாவரமும் தந்தாள்.
தாயினும் சாலப் பரிந்து வாழ்த்திஞள்.

அசோக வனத்தின் சோகக்கதையைத்
தொடர்ந்து செல்ல தோகைக்குத் துணிவில்லை
கம்ப நாடன் எழுதிக் குவித்த
ஏடுகளைத் தொகுத்துத் தொகுத்துக் கட்டியவள்
கம்பனின் எழுத்தாணி ஓலைமேல் நடம்புரிந்த
அகண்டகாவிரி அசைந்து நடப்பது போல்
மெல்ல மெல்ல ஊர்ந்து செல்லும்,
சில வரிகளில் விரைந்து குதிரை நடைபோடும்
சில வரிகளில் தாளத்துக்கு ஜதி மிதிக்கும்
சிலஏடுகளில் பொதிகைத் தென்றல் தவழும்
சிலஏடுகளில் குற்றாலத்துத் தேனருவி
கொட்டும்
விரல்நொடிப்பில் எழுத்தாணி நடிக்கின்ற
நாடகத்தை
வைத்த விழி வாங்காமல் பார்த்திருந்தாள்
அவள்கணவன் ஒருபுலவன் உலகப்பேர்
அறிஞன்
என்ற பெருமைக் கடலிலே மிதந்தாள்
அவள் கண்களை தூக்கம் வந்து தழுவிற்று
தூணொன்றில் சாய்ந்தபடி உறங்கி விட்டாள்
எழுத்தின் மேல் கருத்தூன்றிச் சென்றபடி
கம்பன்
பந்தம் புகைகின்றது எண்ணேவிடு என்றான்.
பந்தம் சுடர்விட ஒருகரம் பிடித்தது.
எண்ணெய் ஏட்டின் மேல் சொட்டியது
வழித்து அவள்முந்தானையில் துடைத்து
விட்டாள்
பசிக்கென்ன வந்திருக்கிறதெனக் கேட்டான்

கவளம் கவளமாக கமகமவென்று மணக்க
பிசைந்து சோற்றை ஊட்டி விட்டாள்
கண்கள் ஏட்டில் மேய்ந்திருக்க
கைகள் எழுத்தாணி நடத்திக் கொண்டிருக்க
நாவும் சுவைத்து, விழுங்கிக் கொண்டிருந்தது.
இரைப்பை எதிரொலித்தது உதட்டைத்
தடவினான்
ஒட்டிய பருக்கைகளை அவளுடையில்
துடைத்தான்.
கட்டிக் கிடந்த ஏடுகளைக் கண்டான்.
விழிகள் வியப்பால் விரிந்தன. மகிழ்ந்தான்.

**கம்பன்**

இத்தனை ஏடுகளும் எழுதியது நானோ?
என்னையும் பொருட்டாக்கி எழுத்தாக
வந்தனையோ
பெற்றவளே பெரியவளே பேருலகைப்
படைத்தவளே
அழுகின்ற குழந்தைகளுக்கு அன்னையும் நீயே
கொஞ்சுகின்ற தந்தையர்க்கு குழந்தையும்
ஆனவளே
என்னே நின்பெருங்கருணை பெண்ணே
வாழ்த்துகிறேன்
என்று இன்னிசை கூட்டினான். அப்போது
விழித்து எழுந்தாள் கமலவல்லி
மன்னிக்க என்றருகில் வந்து அமர்ந்தாள்
தாளத்தில் உணவெடுத்துப் பரிமாறினாள்

**கம்பன்**

உறக்கத்தின் மயக்கமோ ஊட்டிய கை
கழுவிலேயோ
உண்டது உள்நாக்கில் இனித்துக்
கொண்டிருக்கிறது
மறுபடியும் ஒரு படையலோ என மறுத்தான்
உரிமையோடு அவனை உண்ண அழைத்தாள்
என் உதட்டு பருக்கையை உன் உடையில்
துடைத்தேன் என்றான். அவளும் திகைத்தாள்
இளஞ் சிரிப்பும் வளையோசையும் கேட்டு
இருவரும் வளையோசை வந்த திசையை
நோக்கினர். அன்னை அழுந்தூர் மாகாளி
சிரித்த முகத்தோடு சிலையாக இருந்தாள்
எண்ணைக் கறையும் சோற்றுப் பருக்கையும்
அவள் ஆடையில் பளிச்சிட்டன. பதறினான்
ஆற்றாமை மிகுந்து அழுது விட்டான்.

**கம்பன்**

இமயத்து வேந்தன் மகளே உமையவளே
சிமயத்து எழுந்த செந்தழல் கொழுந்தே
கந்தனுக்கு வேல் கொடுத்த கதையும் உண்டு
சம்பந்தனுக்குப் பால் கொடுத்ததைப்
படித்திருக்கிறேன்
பந்தம் பிடித்து பைந்தமிழ் வளர்த்தனையோ
பாசத்தைச் சோறாக ஊட்டினையோ அம்மா
இதற்கு முன் எத்தனை பிறவி எடுத்தேனோ
இன்னும் எத்தனை பிறவி எடுப்பேனோ
ஏதும் இந்தப் பிறவிக்கு ஈடில்லை
மகாசக்தி காளிக்கு நான் மைந்தன்

கம்பன் எழுத்தின் சித்திரம் அவளே
வணங்குவனோ? வாழ்த்துவனோ? வாழி!
மாகாளி!
சிந்தனை அணுவெல்லாம் தேவியின் உணர்வாக
செயலிழந்தான் தனையிழந்தான்
தேரமுந்தூரரான்.
சடையப்ப வள்ளல் அடிக்கடி வருவார்
காவியம் வளர வளர பெருமையில் வளர்வார்
காவிரியின் வெள்ளம் போல் உள்ளம்
தளும்புவார்
இலங்கையில் போர் முடித்து இளையவனை
அரசாக்கி
கற்பின் நெருப்பைக் கனலில் முழுக்காட்டி
பிரம குலத்து அரக்கர்களின் சாவுக்கு
காவிரியில் ஆடி கங்கையில் ஆடி
ஏழுகடல் ஆடினாலும் பழிதீராதென்று
சேதுக்கரையில் சிவனை நிறுத்தி
வழிபாடு முடித்து வழிநடந்தனர் அயோத்தி
சேதுராமன் ஜெயராமன் ஆனான்
பாதுகாராமன் பட்டாபிராமனானான்
பன்னீராயிரத்து ஒரு பதினாறு பாடல்
கொண்டான்.
காளியின் கருணை என்பார் எங்க
கம்பனின் திறமை என்பார் எங்க
தமிழ்மன்னனுக்குத் தலை அலங்காரம் ஆக
கம்பராமன் காவியம் ஆனான்.
குலோத்துங்கன் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.
படை நடத்தி பகைவர் மேல் வாகை சூடி

அயலிடத்தில் புகழ் கொண்ட வெற்றியினும்
பெரிது

காலத்தை வென்று காவியத்தில் நின்று
தமிழ் கொண்டு உலகாளும் கம்பராமன்
திருப்புகழ்

**அரங்கேற்றம்**

அழுந்தூரிலிருந்து ஆறை நகர் வரையில்
வாழையும் கமுகும் குருத்தோலை மாலையும்
வளைவுகள் தோரணமாக வழிஎல்லாம்
அழகுசெய்ய

புது மணல் பரப்பி பூப்பந்தல் நிழலிட்டு
சிற்றடி சிலம்படி செந்தமிழ் குலவையிட
கொம்பு தாரை சங்கு முழங்க
திக்கெட்டும் அதிர முரசுகள் கொட்டி
பட்டத்து யானைக்குப் பட்டு போர்த்தி
கம்பன் ஏடுகளைப் பிடறியில் ஏற்றி
கொற்றவன் குடைபிடிக்க ஊர்வலம்
நகர்ந்தது

தொழுத கையினராய் கம்பர் நின்றுவர
கூத்தர் சடையர் குணவீரர் புகழேந்தி
வரிசைக்கூரியோர் ரதங்களை அலங்கரித்தனர்
இலங்கையை வென்று ராமன் எழுந்த போது
அயோத்தி கண்ட ஆனந்த வெள்ளம்

காவிரி நாட்டில் கரை புரண்டது அம்மா
மூன்று சங்கமும் திரண்டு ஒன்றானதோ
மூவேந்தர் பேரவையும் ஒன்று கூடிற்றோ
ஆறை நகர் அவைக்களம் அமர்க்களப்பட்டது

அந்தப்புர மகளிர் மேல் மாடத்திலிருந்தனர்
அரசன் மகள் அமராவதிக்கு அங்கு தலைமை
கம்பருக்கும் அவர் ஏட்டுக்கும் கணத்ததோர்
சிறப்பு
கொலுவிருந்த குலோத்துங்கன் கூத்தரை
நோக்கினன்
வயதில் பெரியவர் வாழ்த்துரைக்கலானார்

**கூத்தர்**

நெடுங்கவிதை சொன்ன பெரும்புலவன்
கம்பன்
நீடு வாழ தெய்வத்தை வேண்டுகிறேன்
கலை முரண்படாது கருத்து முரண்படாது
உவமை தவறாது உண்மை மாறாது
சொல்லுக்குச் சொல் சுவை மிகுந்து இனிக்க
இனிக்க
பன்னீராயிரம் பாடுவது எளிதன்று
இறைவனின் திருவருள் ராமனின் பெரும்
புகழாக
ஆயிற்று என்பேன் ஆயினும் ஒரு கேள்வி
வழி நூலுக்கு அரங்கேற்றம் வழக்கில்
உண்டோ
ஆன்ற புலவீர் ஆதாரம் தருக
என்றதற்கு கம்பன் எழுந்து நின்றான்

**கம்பர்**

என் எழுத்து மொழி பெயர்ப்பு அல்ல
சொல்லுகின்றேன்
வடமொழியில் ராமகதை மிகமிகப் பலவே

அற்புத ராமாயணம் ஆனந்த ராமாயணம்
அத்யாத்ம ராமாயணம் அகஸ்தியாயணம்
வாசிஷ்ட ராமாயணம் போதாயணம்
சேஷராமாயணம் சம்க்ஷேபராமாயணம்
இவையன்றி பாசனும் காளிதாசனும்
விட்டாரில்லை கிடைத்த இடத்தில் எல்லாம்
ராமனைத் தொட்டிருப்பார் மற்றுபல
சமணச் சார்பில் ரவிசேனர், குணபத்திரர்
எழுதிய காவியங்கள் ராமகதை சொல்லும்
ஹேமச்சந்திரரும் எழுதியது உண்டு
புத்தன் பழம் பிறப்பு வரிசையிலும்
ராமனுண்டு
ராம ஜாதகம் வெஸ்வந்தர ஜாதகம்
சம்புல ஜாதகம் லங்காவதாரசூத்திரம்
தசரத ஜாதகத்தையும் தள்ளுவதற்கில்லை
என்றின்ன பலவற்றில் தெளிந்தவன் வால்மீகி
சரண் என்று நான் வணங்கும் ஞானப்புலவன்
எழுத்துக்கு நேர்நின்று எழுதவும் ஆகுமோ
தருமம் தவறாத கருமத்தில் நின்று
பலன் கருதாத பக்தியில் நடந்து
ஐயம் கலவாத ஞானத்தில் தொடர்ந்தால்
மனிதன் தெய்வம் ஆவான் என்பது
வால்மீகி வகுத்துக் கொண்ட நாயகர்கள்
நான் கண்ட ராமன் அவனல்ல தெளிவீர்
மனித தர்மத்தை மனுக்குலத்துக்கு உணர்த்த
தெய்வம் மனிதப் பிறவி எடுத்தது என்
கதையில்
குழந்தையின் நோய்க்குத்தானே மருந்துண்டு

பத்தியமிருக்கும் அன்னையே போன்று
சீதை சிறையிருந்தாள் தீயில் மூழ்கினாள்
அவள் அழுததும் தொழுததும் தனக்கன்று
தாமரைச் செல்வியே என் கதைக்குச் சீதை
தெய்வங்களும் அடியவரும் நானெடுத்த
நாயகர்கள்
நிகழ்ச்சிகளும் விளைவுகளும் இருவருக்கும்
பொதுவே
சென்ற யுகத்துக்கு முன் யுகத்தில் நடந்த கதை
பழந்தமிழ்ப் பாட்டுக்கள் பலவும் சொல்லும்
ராவணன் சீதையைச் சிறை எடுத்த போது
ரிஷ்யமுக சாரலில் நழுவிய நகைகளைப்
பொறுக்கி எடுத்த குரக்கின மாதர்
கையில் யாக்குவன கழுத்தில் யாத்தன
கழுத்தில் யாக்குவன காலில்யாத்தனர்
நகைகளை நகைப்புக்கிடமாய் அணிந்தார்
என்று
உதாரணம் காட்டும் பழந்தமிழ்ப் பாட்டு
பழமையினும் பழய புறநானூறு அன்றோ
செம்புலப் பெயல்நீர் போல அன்புடைய
நெஞ்சத்துக் காதலர் நெடுவழி சென்றபோது
ஓடினார் என்று ஊரலர் தூற்றியது
உடன் போக்கை முடித்து ஊரறிய மணமக்கள்
ஆனபின்னே வாயடைந்து அலர் ஓய்ந்ததை
வெல்போர் ராமன் அருமறைக்கு ஒலியவிழ்ந்த
பல்வீழ் ஆலமென்று அகநூல் பகருகின்றது
கண்ணகியும் கோவலனும் காவிரிப்
பூம்பட்டினத்தைப்

பிரிந்தார் என்பதைப் பேசுகின்ற இளங்கோ
அரும்பெறல் ராமன் பிரிந்த அயோத்தி
என்கிறார்
ஆக ராம கதை தமிழ்ப்பாடல்களிலுமுண்டு
தென்னாட்டு சிற்றூர்கள் பலவற்றின்
சரித்திரத்தைத்
திடமுடனே ஆராய்ந்தால் தெரியவரும் பல
உண்மை
வட குரங்கு ஆடுதுறையே வாலி வணங்கிய
தலம்
திருப்பணந்தாள் தாடகை தவமிருந்தகோயில்
சடாயு புள்ளிருக்கும் வேளூரில் உயிர்நீத்தார்
மாரீசன் அடியுண்டது கொல்லுமாங்குடி
திரிசிரன் நிலைக்களம் திருச்சிராப்பள்ளி
ஆதித்த இருதயத்தை ராமனுக்குப் போதித்த
அகஸ்தியன் கோயில்கொண்டது அகஸ்தியாம்
பள்ளி
பருத்தியூர் என்பதே பரத்துவாச ஆசிரமம்
ஊரையும் பேரையும் உரைத்துப் பார்த்தால்
தமிழ்நிலத்தில் ராம சரித்திரச் சுவடு தெரியும்
மொழி தோறும் ஊர்தோறும் ராமனைத்
தமரென்பார்
தவறென்ன கண்டீர் எனக்குமுன் எழுதிய
அனைவரையும் மறக்கிலேன் வணக்கம்
வணக்கம்

**தாதன்**

வாழிய கம்பரென்று வாழ்த்துரைத்து
வாணியன் தாதன் கேட்கிறேன் ஒரு விளக்கம்

வடபுலத்து வேந்தன் தென்புலத்துக்குத்
தேவனே
எடுத்து எழுத இங்குவேறு தெய்வம் இலையோ
இறக்கு மதிக்கு ஒரு பெரும் காவியப்
படைப்போ
புலமைத் திறனுக்குப் பொருள் வேறு
கிடைத்திலதோ

**கம்பர்**

வலிய புலவன் வாணியன் தாதனுக்கு
எடுத்துச் சொல்லும் நிலைமைக்கு
இரங்குகின்றேன்
சேரத்து இளங்கோ சிலம்புக்கு ஆசான்
சமணப் புலவன் சாற்றியது மறந்தார்
''மூவுலகும் ஈரடியால் முறை நிறம்பா வகை
முடிய
தாவிய சேவடி சேப்ப
தம்பியொடும் கான் போந்து
சோவரனும் போர் மடிய
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே''
தமிழ்க் கவிகளின் குலத்துக்குப் பாட்டன்
பாடியதற்கும் மேலும் ஒரு விளக்கம்
வேண்டுமோ
ஆழ்வார் திரு மொழியும் ராமக்தை
சொல்லும்
அதற் கென்ன பதில் சொல்வீர் எனக்
கேட்டார்

**குணவீரன்**

முழுநூலும் அவர் எழுதவில்லை முடிவுரை
உத்திர காண்டம் கூத்தரின் கைத்திறன்
என்பதென்ன உண்மையோ குணவீரன்
கேட்கின்றேன்
என்பதற்கு கூத்தர் எழுந்து விடையிறுத்தார்

**கூத்தர்**

வைதேகி மீது கம்பருக்குப் பக்தி அதிகம்
மறுபடியும் வனம் போக்க மனம் ஒப்பவில்லை.
முடிசூட்டோடு காவியத்தை முடித்துக்
கொண்டார்
அதன் தொடர்கதையை நான் தொடர்ந்தேன்
கம்ப ராமனுக்கு இங்கே அரங்கேற்றம்
கம்பரின் சிறப்பில் நான் பங்கு கேட்கவில்லை

**புகழேந்தி**

மதுரத்தமிழ் முழங்கும் மாமதுரைப் புலவன்
புகழேந்தி நான் போற்றுகின்றேன் கம்பரை
கம்பரின் இலக்கிய நாயகன் ராமன்
சரராமன் புகழ்ச்சியோ நூற்றுக்கு விழுக்காடு
பார் வேந்தன் குலோத்துங்கனிலும் அவன்
பெரியனே
ஆர்த்த சபை நூற்றொருவர் என்ற அவ்வை
வார்த்தை பதினயிரத் தொருவர் என்றாள்
சரராமனை சொன்னது என்நட்பின்பெருக்கு
பார்வேந்தன் என்பதிலும் மன்னன்
பாவேந்தன்
பதினயிரத்தில் ஒருவனைப் பாராட்டினேன்
காண்க.

**புகழேந்தி**

கம்பர் மகன் அம்பிகாபதி ஒரு பெரும் புலவன்
கருத்துரைக்க வேண்டுகிறேன் கேட்போம்
என்முன்

அம்பிகாபதி அவைக்கு வணக்கம்
செலுத்தினன்

அவையில் கம்பர்புகழ் பொறுத்திலரைக்
கண்டான்

ஏட்டுக்கு பட்டத்து யானையோ என்றெரிந்தவர்
பூசாரியைத் தெய்வமாக்கும் புதுமை என்றவர்
வைணவத்துக்கு!வாழ்வெனக் காய்ந்தவர்
முணுமுணுப்பும் சலசலப்பும் முள்ளாக
உறுத்திற்று

புழுங்கிய மனத்தின் உணர்வு பொங்க

**அம்பிகாபதி**

என் தந்தை ஆக்கியது தெய்வமாக்கதை
அதுபெரிதும் ராமனைப் பாடும்வைணவப் புகழ்
சைவரும் பௌத்தரும் சமணரும் கலந்த
பொதுச்சபை ஒரு சமய நூலை ஏற்பதோ
திருமாலின் கோயிலிலே சிறப்பிக்க வேண்டும்
இளையேனுக்கு தெரிந்ததைச் சொன்னேன்
இனிமேல்

அரசரும் ஆன்றோரும் முடிவெடுக்க
வேண்டுமென

பேசி முடித்தான் அவையினிலே பேச்சில்லை
பேரரசன் மனம் இடிந்தான் சரராமன்
தலை கவிழ்ந்தான்

கூத்தரும் குணவீரரும் மெல்ல நழுவினர்

கம்பர்மனம் சிரித்தார் காளியை நினைத்தார்
முடிசூட்டு நாளில் மூலராமன் வனம்போனான்
அரங்கேற்ற நாளில் அவன்கதைக்குத்
தடையோ
திருமாலின் பெருமைக்குத் திரையாக
மகன்விழுந்தான்
விதிவகுத்த சதியோ இதுவென்று வெந்தார்
எதிர்ப்புகள் அனைத்தையும் நெருப்பாக
எரித்தவர்
மகனின் மறுப்புரைக்கு மறுப்புரைக்க
வாயிழந்தார்
ஏட்டுச் சுவடிகளை எடுத்துச் சுருட்டினார்
தடுத்து நிறுத்த சரராமன் தத்தளித்தான்
பகை முகத்தில் வாளால் பேசும்வலிய சோழன்
இலக்கியச் சந்தையில் இளைத்து நின்றான்
கம்பர் சிவிகைவிருது சேவகரை மறுத்தார்
சுவடிக் கட்டைச் சுமந்தபடி நடந்தார்
சோழனும் அவரை ஏழடி தொடர்ந்தான்
வெண்ணைச் சடையனும் உடன் பயணமானான்

**கம்பர்**

வள்ளலே நில்லுங்கள் வருவான் கம்பன்
என்எழுத்தாணி முனையில் எழுத்தாக பழுத்த
அழுந்தூர் காளி ஒருநாளும்
தோற்கமாட்டாள்
அன்றொரு நாள் சாட்சிக்கு வந்த ஆயமகள்
மாய்ந்தாளோ மருளாதீர் வருகின்றேன்
வருகின்றேன்,
மகனே அம்பிகாபதி என் மனவருத்த
மெல்லாம்

அரங்கேற்றம் நின்றதற்கல்ல அவையில் நான்
தோற்கவில்லை
தெய்வீக நிகழ்ச்சிக்குத் தடையான பாவம்
உன்னை வருத்து மென்றே வருந்துகின்றேன்
எனவழியும் கண்ணீரால் மகனை நினைத்தார்
நான்வருகின்ற வரையில் மகனே உன்னை
அழுந்தூர் காளிக்கு அடைக்கலம்
வைக்கின்றேன்.
நாளும் நீ விளக்கேற்றி விளக்காக எரிய
வேண்டும்.
பரிகாரம் அதுவே வாழிய மகனே
வருகின்றேன்
ஆறைநகர் விட்டு அரங்கத்துக்குப்
புறப்பட்டார்
சோழன் பேரவை சுடர் குன்றிய விளக்கானது
அழுந்தூர் அழுதது உவச்சன் தேம்பினான்
கம்பரின் மனைத்தலைவி கண்ணீர்க் குளமானாள்
அரங்கன் திருநகரில் பட்டர்களின் படிக்கட்டில்
கம்பரின் சுவடிக்கட்டு ஏறி ஏறி இறங்கிற்று
அங்கீகரிப்பதற்கு அர்ச்சகர்கள் அஞ்சினர்
சர்ச்சைக்குரியதை சரியென்று ஒப்புவதோ
சோழன் பேரவை புறக்கணித்த ஒருநூலை

கொள்ளத் துணிவில்லை. இராமசரிதம்
வைணவம் என்பதால் தள்ளவும் மனமில்லை.
நன்னூல் அலங்காரம் தந்த சமணர்கள்
சரியென்று ஏற்கவேண்டும் மேலும்
சிவ கணங்களான தில்லை அந்தணர்கள்
ஒப்பினால் நாமும் ஒப்புவோம் என்றார்.

தில்லையிலும் ஒரு கோவிந்தன் இருக்கிறுன்
என்ற

டுடனே கம்பர் தில்லைக்கு நடந்தார்
அரங்கேற்றம் தடைப்பட்ட நாள் முதலாய்
ஆறை நகர் அரண்மனையில் கலகலப்பில்லை
சோர்ந்திருந்த சோழனின் விழிப்புக்கு ஓர்
வாய்ப்பு

தெலுங்கச் சோடர்களின் செறுக்கடக்க
திரிபுவன முடையான் போருக்கு நாள்
குறித்தான்

புவனமுழுதுடையாள் மகளுக்கு வரன்
கேட்டாள்

**சோழன்:**

தென்னவன் நமக்குத் தோற்றகுடி நிகரில்லை
பல்லவன் பரம்பரை வழியற்றுப் போனது
களப்பிரர் வாழ்விழந்தார் முத்தரையர் நம்
ஏவலர்

வாரங்கல் இளவரசன் வயதில் மிகுந்தான்
ஹொய்சளர் உறவென்றுல் முடிக்கு உரிமை
கேட்பார்

அவளுக்கென்று ஆற்றல் மறவன்
பிறந்திருப்பான்

அடையாளம் தெரியும்வரை பொறுத்திடுக
என்றுன்

**அரசி**

அம்மங்கை வயதில் நின்றிருக்க மாட்டாள்
போரில் உங்கள் பொழுது கழிந்திடும்
பொறுமையெனக்கே

**அரசன்**

என்றதற்கு "என் மகள் இலக்கியவாணி
கவிதை படித்திருப்பாள் கவலை உனக்கே
னென்முன்

அப்போது ஆங்கே அம்மங்கையும் வந்தாள்

**அமராவதி**

ஐம்பெருங் காப்பியம் என்றறைகின்றார்கள்
சிலம்பு மேகலை சிந்தாமணி மூன்றுண்டு
வளையும் குண்டலமும் ஏன் அழிந்தது
கற்றவரை அழையுங்கள் கேட்பேன் என்றாள்

**சோழன்**

நான் போர் நடத்தப்போகின்றேன் மகளே
கூத்தர் புகழேந்தி குணவீரர் இருக்கின்றார்
தமிழ் நடத்திக் கொண்டிருப்பதுன்
பொறுப்பென்றான்

அம்மங்கை அவ்வையினும் பெரியவள் ஆயினாள்

தண்டியலங்காரன் தந்தையும் அம்பிகாபதி
வீரைக்கவிராயன் மைந்தனும் அம்பிகாபதி
கம்பர் மகனும் ஒரு அம்பிகாபதி என்பார்
கோவையும் காரிகையையும் தந்தவன் எவனோ
அழுந்தூர் காளிக்கு பூசாரி நம் நாயகன்
ஒரு மாலைப் பொழுதில் அந்தி மயங்கும்போது
திருவிளக்கேற்றினான் திருவிளையாடல்
என்னென்பேன்

எழுந்த ஒளிச்சுடர் எழுந்து ஓங்கிற்றே
சிலையாக நின்றவள் செந்தமிழ்ப் பெண்
ஆனாளோ

தேன்சிந்தும் முழுநிலவை முகமாய்க்கண்டான்

நீல விழி மலர்கள் காவியம் பாடின
நெஞ்சத் திரையில் அவளழகை நிறுத்தினான்
செந்தமிழ் வண்ணச் சித்திரம் கண்டான்
அர்ச்சனைக்கு பாட்டெடுத்தான் வர்ணனையோ
வர்ணனை

**அம்பிகாபதி**

பெண்ணே நின் பேரழகைச் சொல்ல
வல்ல தமிழ்ச் சொல் நிகண்டுகளில் இல்லையடி
என்றவன் தொடங்கும்போது தோகையும்
வந்தாள்

கரிய முகில் உனக்கு முடியாய்ச் சுருண்டதோ
எட்டாம் பிறை நிலவு உன் நெற்றிக்கு நிகரோ
வேல் கொண்டோ மீன் கொண்டோ விழி
யமைத்தார்

செம்பவளத்துண்டினால் இதழை இழைத்
தாரோ

கடல் மூழ்கி முத்தெடுக்கின்றார் அறியாமை
நீ சிரித்தால் முத்து மழையாகப்
பொழியாதோ

அழகொழுக பெண்மை திரண்ட பெருஞ்
சுமையை

சின்ன இடைகொண்டு சுமக்கின்றாய்
எப்படியோ

கருணையை அமுதாக நீ சுரந்து கொடுத்தால்
சம்பந்தன் என்ன நானும் ஓர் ஆயிரம்
பாடேனோ

காஞ்சியில் தவமிருந்த காரிகையே
காவிரியின் ஓரத்தில் நீ காத்திருப்பது
யாருக்கோ

தாமரைத் தண்டுருண்டு நின்தாள்
மலரானதோ
நின்சிற்றடிச் சிலம்புகள் என்நெஞ்சில்
குலுங்குதம்மா
சங்கரன் நின் சவுந்தரியத்தை லகரியாக்கினான்
சியாமளையே உனக்குத் தண்டகம்
சொன்னவனுண்டு
எழுத்தில் அடங்கா எழுதரிய ஓவியமே
நின்பேரழகு மயக்கத்தில் சிவனும்
பித்தன் ஆனால்
ஏழைப்புலவன் நான் என்னவேன்
வார்த்தைக்கு வார்த்தை வர்ணிப்பு
தனக்கென்று
கேட்டிருந்த இளவரசி கிறுகிறுத்துப் போனாள்
நின்றிருந்த நிலம் நழுவ சிறகடித்துப்
பறந்தாள்
உடனிருந்த தோழி ஓசையிட
மணியசைத்தாள்
உணர்வுக்கு வந்த புலவன் கற்பூரம் ஏற்றினான்

**அம்பிகாபதி**

தாயே சரணம் தமிழே சரணம்
வாழி மாகாளி வணங்குதும் யாமே
வளவர்குலம் ஓங்க அருளுக அம்மே
அரசிளங்குமரிக்கு ஆராதனை தந்தான்
ஒருவிழி நிலம் நோக்க ஓரவிழியால்
நோக்கினாள்
அவளழகு மணிக்கரம் அணைத்து தீபத்தை
திடுக்கிட்டாள் தோழி திகைத்தான் புலவன்

மறுபடியும் கூடத்தைப் பொறுத்து முன்னே
வெட்கம் விரட்ட வெளி நடந்தாள் இளவரசி
கூடத்தின் சூடு மெல்விரலில் கொப்பளித்தது
புரியாத உணர்வு அவளுள்ளத்தில்
கொப்பளித்தது
சரிந்த கூந்தலை அவள் அள்ளி முடித்தாள்
சரியாத அவனுயிரையும் உடன் சேர்த்து
அவள்சென்ற திசையில் சென்றதவன் விழிகள்
தெரிகின்ற பொருளெல்லாம் அவளாகத்
தெரிந்தாள்

**போர்முனை**

சோழியப் பெரும்படை தொடர்ந்து நடை
போட்டது
வெள்ளாறு தென்பெண்ணை பாலாறு கடந்து
வடபெண்ணைக் கரையில் வடுகரை வளைத்தது
மேலை வானம் அந்திக்குச் சிவக்கும்
வேலும் வாளும் உலைக்களத்தில் சிவக்கும்
வடுகர் நிலம் உயிரைத்தோற்ற மறவர்களின்
மனைக்கிழத்தியர் அழித்த குங்குமத்தால்
சிவந்தது
குலோத்துங்கன் விழிகள் வெற்றிக்குச்சிவந்தன
மன்னன் வடபுலத்தில் போர் நடத்திக்
கொண்டிருந்தான்
மங்கை அவைக்களத்தில் தமிழ்நடத்திக்
கொண்டிருந்தாள்
கூத்தர் தக்கயாகப் பரணி படிப்பார்
கோதையவள் கோவைக்குப் பொருள்
கேட்பாள்

புகழேந்தி நளனின் கதை விரிப்பார்
தமயந்தியை கை விட்டதற்கு இவள்
பதைப்பாள்
குணவீரர் சமண காப்பியம் படிப்பார்.
குண்டலம் வளையாபதி கொலையுண்டதேன்
என்பாள்
இரண்டையும் எழுத சிலர் முன் வந்தார்
வேண்டாத கருத்து விலையற்றுப் போனது
கொண்டவனைக் கொன்ருள் குண்டலகேசி
குறள் வழி வந்த கொள்கைக்குப் புறம்பானது
ஆதலின் அழிந்ததென்ருன் அம்பிகாபதி.
வளையாபதியோ ஒரு நவகோடி நாயகன்
கொண்டவளிருக்க கொண்டான் மறுதாரம்
இளையவள் வயிறு வாய்த்தது பொருமல்
மூத்தவள் பெருமலே பெற்றதாக ஏய்த்தாள்
பெண்மையின் பெருமைக்குச்சிறுமை தரும்
கதை என்று
இகழ்ந்தனரோ இழந்தனரோ என்ருன்
அம்பிகாபதி
அவன் கருத்துக்கு மறுப்புரைத்தாரில்லை
மதிப்பில் உயர்ந்தான் அவள் மனத்திலும்
வளர்ந்தான்
கூத்தரை குறுந்தொகை சொல்லக் கேட்டாள்
அவள் குறும்புக்கு அஞ்சினர் கிழவர்
குண வீரரைக் கேட்டாள் அவள்வம்பு
தனக்கேனென்று
தன்னிலும் பெரிய தாதனைச் சொன்னன்
வாணியன் தாதன் தனக்கு வெளியூர்

பயணம் இருப்பதாகச் சொல்லித்தப்பினான்
அம்பிகாபதியை அழைத்தாள் ஆசான் ஆனான்
பாடம் படித்தாளோ அவனுக்கு படிப்பித்
தாளோ
அகத்துக்கு பொருள் விரிப்பான் அவளே
ஆவாள்
கலித்தொகையின் உடன் போக்கைச்
சொல்லுவான்
கற்பனைத் தேரில் அவளே உடன்போவாள்
குறுந்தொகைக்கு உட்பொருளாய் நற்றினைக்கு
விரிவுரையானாள்
அரியணைக்கு உரியவள் அறிவிலும் பெரியவள்
காவலன் மகள் காவலுக்கு மேற்பட்டவள்
ஆதலின் அவளன்புக்கு அணையில்லை பெருகிற்று
காவிரியின் சோலையிலே காதல்மயில்
ஆடியதோ
வானவில்லின் வூடேறி வண்ணக்குயில்
பாடியதோ
இளமையின் ஊஞ்சலில் இளவரசி ஆடினாள்
இயற்கையின் துள்ளலிலே இளங்கவியும்
பாடினான்

**பாயிரம் பெற்றார்:**
கம்பர் தில்லையில் அந்தணர்களைக் கண்டார்
பன்னீராயிரம் படிப்பதற்கு நேரமில்லை
என்றார்சிலர்
ராமகதை தெரிந்தகதை புதிதல்ல
என்றார்சிலர்
வானால் புகழளந்த வாகீசப் பெருமானே

தேனுல் தமிழளந்த சீர்காழிப் பிள்ளையோ
சிவன் தூது நடந்த செந்தமிழ்ச்சுந்தரனே
பொன்வேய்ந்த சோழனுக்குப் புகழ்வேய்ந்த
சேக்கிழாரோ
திருவாசகம் சொன்ன மணி வாசகனே
நாலாயிரம் பாடிய ஆழ்வாரில் ஒருவரோ
சோழன் முன்னிலையில் செல்லாத ஒன்றுக்கு
அரங்கன் சந்நிதியில் ஆகாத ஒன்றுக்கு
தில்லையில் பாயிரம் பெறவந்த கம்பன்
என்ன பெரிய கொம்பனே என்ருர்சிலர்
மூவாயிரவர் ஒன்றுகூடி முடிவு சொல்ல
கம்பனுக்கு வயது போதுமா என்ருர்சிலர்
எழுத்தாணி மழுங்க, எழுதியது பெரிதல்ல
எழுத்தும் சீரும் எதுகையும் மோனையும்
நான்நீ என்று முன்நின்றது பெரிதல்ல
தில்லையில் அவர் திரிந்து திரிந்து ஓய்ந்தார்
கோவிந்தன் சந்நிதியில் சலித்துச் சாய்ந்தார்
அன்றிரவு ஒரு தீட்சர் வீட்டுப்பிள்ளையை
அரவம் தீண்டிற்று அந்தோ பரிதாபம்
மருந்துகள் பலிக்கவில்லை மந்திரம் ஜெயிக்க
வில்லை
மாண்டதற்கு திரண்டனர் தில்லை அந்தணர்
ஈமக் கடனுற்றி எரி எடுத்தார் அதுபோது
துக்கம் கேட்பதற்கு கம்பரும் வந்தார்

**கம்பர்**

அனந்தனே வாசுகியோ பதஞ்சலியோ
அறியேன்
ஆழியான் பள்ளி கொண்ட அணையே

வாழிவரையின் மணித்தாம்பே
புரமெரித்த பொற்சிலையின் நாணே
பாரைச் சமந்த படாபடமே
சங்கரா பரணமே சங்கடம் தீராயோ
நஞ்சே நாகவிடமே நாணி நடவாயோ
ஏறிய பாம்பே இறங்குக இறங்குக
ராமாய ராம பத்ராய ராகவம்
ராமாய ராமச்சந்திராய ராகவம்
என்றதும் நீலம் பூத்து கிடந்தபிள்ளை
நிமிர்ந்தான் எழுந்தான் அந்தணர் வியந்தார்
நாகபாசப் படலத்தின் சில வரிகளே
நமன் வாயிலிருந்து மீட்டதென்றுணர்ந்தனர்
ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து
பன்னீராயிரம் பாடலும் கேட்டனர்
கம்பராமனுக்குப் பாயிரம் கூறினர்
கம்பருக்கு விருந்தும் விழாவும் தூளிபட்டது

திரு நறுங் கொண்டைச் சமணர்களும்
போற்றினர்
இகபரம் இரண்டுக்குமான சிதம்பரத்திலிருந்து
திருவரங்கத்துக்கு திரும்பினர் கம்பர்

வேதம் தமிழ்செய்த மாறனைப் பாடினையோ
எனஅரங்கன் கேட்டதாக உள்ளுணர்வு
உணர்த்திற்று
ஒருநூறு கலித்துறை சடகோபர் அந்தாதி
ஆயிற்று பட்டர்களும் பரவசம்ஆனர்
கம்பரின் பெருமைக்குப் பெருமைசெய்ய
ஸ்ரீமன் நாதமுனிகள் வந்தருளினர்

படலம் படலமாக படிக்கச் சுவைத்தனர்
வால்மீகி வரையாத பகுதி ஒன்று
இரணியன் வதைப்படலம் ஏதுக்கென்றனர்
பக்தியில் பெரிய பரம பாகவதன்
பிரகலாதன் பெருமையைப் பேசுவதற்
கென்றார்
இரணியன் தூணை எட்டி உதைத்தான்
இருகூறாய் பிளந்தது—எரிமலை வெடித்ததோ
"சிரித்தது செங்கட் சீயம் என்றார்
அண்டம் அதிர்ந்ததோ வாணிடிந்து
தகர்ந்ததோ
மோட்டழகிய சிங்கராய் நின்ற சிலை
முழங்கிற்றம்மா
அதற்கு மேல் வாதாட வாயற்றுப் போனார்.
கம்ப ராமன் கவியரங்கேறினான்
அரங்கன் திருமுன் ஆராதனை வழிபாடு
பரிவட்ட மரியாதையுடன் பாயிரம் பாடினர்.
வடபுலம் சென்றிருந்த வளவர் கோன்
வாகைமேல் வாகை சூடி வந்தான்
அவன் வெற்றியினும் பெரிதென்றான்
அரங்கேற்றம்
கம்ப நாடன் நடந்து திரிந்த
வழித்தடமெல்லாம் வரிவிலக்கென்றான்
வரவேற்பும் தனிவிருந்தும் பரிந்தளித்தான்
கூத்தர் தாதன் குணவீரர் புகழேந்தி
அம்பிகாபதிக்கும் அழைப்புக் கொடுத்தான்
தமிழுக்கு வாய்த்த தனிப்பெருமை
என்னென்பேன்
மன்னவன் மகளே முன்நின்று பரிமாறினாள்

கொஞ்சிற்று சலங்கை; குலுங்கிற்று மேகலை
தென்றல் அசைந்ததோ தேரொன்று
நகர்ந்ததோ
மன்னவன் மகளாயினும் அவளும் மங்கையே
வீரம் பாடும் விழிகளுக்கு முன்னால்
ஓரவிழி கொண்டு ஓராயிரம் பேசினாள்
இளவல் அம்பிகாபதி இடத்தை மறந்தான்
இட்டஅடி நோக எடுத்தஅடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து வந்த பேரழகை
வர்ணிக்கத் தொடங்கினான் கம்பர்
அதிர்ந்தார்
கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று ஒரு கிழவி
கூவுகின்றாள் வீதியிலே எனப்பாட்டை
முடித்தார்
வேந்தனுக்கு வியப்பில் புருவம் உயர்ந்தது
மகன் தொடங்க தந்தை முடித்தது ஏனோ
ஆசு பாட வந்த அவசரம் என்னவோ
வெளி மாடத்தில் நின்று வீதியை நோக்கினார்
வெள்ளை உடுத்திய கிழவி ஒருத்தி
கிழங்கு விற்க கண்டனர் ஆங்கே
பார்வேந்தன் மகள் மேல் பாவேந்தன்
மகனுக்கு
மையலோ என்றதோர் ஐயம் வெளிப்பட்ட
தம்மா
பெரிய இடத்தைப் பற்றிப் பேசத் துணிவில்லை
கம்பரின் வாக்கைக் காக்க வந்தவள்
கலைமகளே என்றுணர்ந்தான் சோழன்

**சோழன்**

புறநானூற்றுக்குப் புதுநானூறு கொள்ளச்
சென்றிருந்தேன்
அக நானூற்றுக்கு என் மகள் ஆளானாளோ
இயற்கை
முடிக்குரிய குலக் கொடி உடுக்கடிக்கும்
படிக்குரியவளோ
பகைக்குலத்து வேந்தர் என்னைச் சிரிப்பார்
ஊரலர் தூற்றும் பொறுப்பதெப்படியோ
கொதித்தது நெஞ்சம் பொறுத்தது
பெருந்தனம்
அறிவும் உணர்வும் அரசியல் வழிப்பட்டது
கம்பர் மகனைக் கடிந்து கொண்டார்

**கம்பர்**

நெருஞ்சி பழுத்து கனியானதுண்டோ
நெருப்புக் கொழுந்து நிலவானதுண்டோ
மன்னவன் மகள்எனக்கு மருமகளோ மகனே
பிள்ளை மதியால் பெரும் பிழை செய்து
விட்டாய்
அழுந்தூர் காளிக்கு அடைக்கலம் வைத்தேன்
உன்தலைக்கு மேல் படைக்கலம் என்றால்
பொறுப்பனோ
விதிக்கு விதி எழுதும் வித்தை நானறியேன்
புத்திர சோகத்தில் என்னைப்புதைத்தாயே
பொறுமினோர் உறுமினோர் புழுவெனத்
துடித்தார்

தனிமையில் வேந்தனைக்கண்டு தலைகுனிந்து
நின்றார்
வேந்தனும் ஆய்ந்து தெளிந்து அறிவுறுத்தினான்
சோழன்
இளமையும் இயற்கையும் செய்த
பிழையோ பெரிது
சரித்திரப் பழுதை தாங்குமோஎன் இதயம்
தண்டனை என்றால் தவறு அம்பலம்ஆகும்
நாடு கடத்துவதற்கு நிகரான பயணம்
வாரங்கல் நாட்டுக்கு தூதுவன் ஆக்குவோம்
பாரா காவியத்துக்குப் பரிசு அதுவே என்றான்
கம்பரும் இறந்தவன் பிழைத்தேன் என்றார்
அடுத்த நாள் பேரவையில் அம்பிகாபதிக்கு
எதிர்பாராத ராஜ மரியாதை—அதிர்ந்தான்
முத்திரைக் கோலும் ஓலைச்சுருளும்
பரிவாரம் சூழ படையும் கொடுத்து
வாரங்கல் நாட்டுக்கு வழியனுப்பி வைத்தனர்

தந்தை சதி புரிந்தாரென்று தத்தளித்தாள்
அமராவதி
கயல் விழி பழுத்து கனல் விழி ஆனதோ
தென்றலும் சுட்டது தேன் நிலவு எரித்தது
உள்ளம் புழுங்கிப் புழுங்கி உன்மத்தமானாள்

காவிரி கொள்ளிடம் காவதம் கடந்து
வெள்ளாற்றுக் கரையில் விரித்தனர் கூடாரம்
தள்ளாடு மனமும் தளர்ந்த உயிருமாக
இருப்புக் கொள்ளாமல் இருந்தான்
இளம்புலவன்

யாரும் அறியாமல் ஆறைக்கு பறந்தான்
மூடிக் கிடந்தது முன்வாசல் பின்வாசல்
மூடாத விழிமலர்கள் வாடிக் கிடந்தது மேல்
மாடத்தில்

பாடித் திரிந்த நிலா பார்த்துச்சிரிக்க
நூலாடத் தெரிந்தவன் நூலேணி
கொண்டேறினான்

வலம் வந்த காவற்படை வளைத்து பிடித்தது
காரிகை தன்னைப் பணயம் வைத்தாள்
காலன் சிரித்தானோ காவலர் சிரித்தனர்
கிழக்கு வெளுத்ததோ கேள்விக்குறியானதோ
மன்னவன் கோயில் வாயில்மணி
அசைந்ததம்மா

ஆறை நகர் பேரவை நிலை கொள்ளவில்லை
ஒற்றனோ கள்ளனோ உன்மத்தனோ இன்னும்
இருக்கின்றான் மன்னவன் இரக்கத்தினால்
என்றனர்

கவலை தீர்ந்திருந்த கம்பரும் வந்தார்
வெண்ணைச்சடையன் வினாக்குறியோடு
வந்தான்

கூத்தருக்கோ இனம் புரியாத குழப்பம்
கொதித்த மனத்தோடு குலோத்துங்கன்
வந்தான்

படைக்கல மறவரோ பதைத்து நின்றார்

**சோழன்**
குற்றம் புரிந்தவனை கொன்றிருப்பார்
இதுநேரம்

எதிர்காலம் என்னை பழிக்கலாகா
தென்பதற்காக

இன்னும் உயிரோடிருக்கிறான் கொண்டுவருக
என்றதும், சபைக்கு பேர் அதிர்ச்சியாக
இளங்கவியை தளையிட்டு இழுத்து வந்தார்
தரை கழன்றதோ தலை சுழன்றதோ
கம்பர் நிலை இழந்தார்

**சோழன்**

ஆன்ற பெரியோரே அறம் கூறும் சான்றோரே
ஒரு புறாவுக்காக தன் தசையைக் கொடுத்த
சிபிக் குலத்துச் சோழன் குலோத்துங்கன்
கேட்கின்றேன்

கட்டு கடந்து காவல் மீறி
கோட்டைச் சுவரேறி குதித்தவனுக்கு
என்ன தண்டனை

நீதி பெரிதென்று தன்னொரு மகனை
தேர்க்காலிலிட்ட மனுக்குலத்து சோழன்
கேட்கின்றேன்

அரச கட்டளை அரசியல் தூது
பாதையில் மறந்து வந்தவனுக்கு என்ன
தண்டனையோ

பகருவீர் பகருவீர் என்றான் பார்த்திபன்
அவையினிலே அசைவில்லை பேச்சில்லை
கொலைக் களத்தில் தலைவாங்குவதே
முன் மரபென்றான் ஒரு கிழவன்
நேற்றுச் சபையில் ராஜ மரியாதை பெற்றவன்
இன்று குற்றக் கூண்டிலென்றால் குறை
என்னவோ

சபையறிய சாற்றுவதே முறை என்றான்
துணிந்து
சோழனின் பெருமையை சுட்டெரிக்க வந்தான்

அதற்கு மேல் சொல்ல எனக்கு வாயில்லை
கம்பரைக் கேளுங்கள் கதைக் கட்டும் என்ருன்
கம்பரோ மகனே மகனே என்று புலம்பினர்
மற்றதற்கு மேலொன்றும் பேசத்தெரியவில்லை
கூத்தர் எழுந்தார் கும்பிட்டார் நின்ருர்

கூத்தர்

மன்னவன் என்மாணவன் மானம்
பெரிதென்கின்ருன்.
கம்பர்மகன் மன்மத ராகம்
பெரிதென்கின்ருன்
ராமகதை சொன்னவன் புத்திரசோகம்
பெரிதென்கின்ருன்
நான் கிழவன் நீதியிலும் கருணை
பெரிதென்கின்ருன்
நல்லோரே பெரியோரே நானும் ஒருவரம்
கேட்கின்றேன்
முன்னைய நியதி என்று முடிவெடுத்து
அம்பிகாபதியை கொலைக் களத்துக்கு
அனுப்புவது
தமிழைக் கொல்லுவதென்பேன் மறுப்பவர்
உண்டோ
முன்னம் ஒருகடல் வெள்ளம்முத்தமிழைக்
கொன்றது
அகத்தியம் வியாழமாலை களரியாவிரை
இழந்தோம்
இன்று காவியம் தந்தவன் குலத்தை
இழப்பதோ
உள்ளம் உருகிற்ருே ஊன் உருகிற்ருே உணர்வு
கசிந்ததோ

கூத்தர் குழைந்து நின்று கேட்டார்
சபையிலே பெரியதொரு பரபரப்புசலசலப்பு
மன்னவன் சிந்திக்க வேண்டும் என்ருர்கள்
மாற்றென்ன சொல்லுங்கள் என்ருன் சோழன்
இயற்கை சதிராட இளமை ஊஞ்சலாட
இளங்கவி தனைமறந்து உயரப் பறந்து
விட்டான்
என்பதை மன்னிக்க மறக்க ஓர் நிபந்தனை
பேரின்பமாக ஒரு நூறு அவன்பாடவேண்டும்
ஆறை நகர் பேரவை ஆனந்தக் கடலானது
அந்தப் புரத்தில் அமராவதி உயிர்த்
தெழுந்தாள்.
கூப்பிய கரத்தோடு கூத்தர் மேற் சாய்ந்த
கம்பரைத் தாங்கிப் பிடித்தான் தாதன்
நாள் குறித்தார் மேடையிட்டார்
காவலன் கொலுவிருந்தான் கம்பர்மகன்
தொழுது நின்ருன்
பன்னீராயிரம் பாடிய பாவலன் மகன்
நிபந்தனையில் வென்று நேரிழையை பரிசு
கொள்ளானே
எழுத்துக்கு எழுத்து ஆயிரம் பொன்கொடுத்த
மாவளவன் பரம்பரை மகள் கொடைக்கு
மறுப்பானே
என்ற நம்பிக்கையில் உயிர்த்திருந்தாள்
அமராவதி!
பாட்டெண்ண, மலரெண்ணி நூறு
கொண்டு வந்தாள்
அழுந்தூர் காளியை நினைவிலே நிறுத்தி

நம்பியும் பாடத் தொடங்கினுன்
சொல்லும் பொருளும் தொடரத் தொடர
யாப்பும் அணியும் காப்புக்கு வந்தன
வானுர்ந்த பொதிகையிலே வளர்ந்த
தமிழ்மகள்
நாவார்ந்த புலவனுக்கு நடம் புரிந்தாள்
வேதாந்த சித்தாந்த விளக்கங்களை எல்லாம்
விளையாட்டுப் பந்தாக ஆடினுன் இளங்கவி
தோகையவள் பூரித்தாள் தோளிரண்டும்
துள்ள
பாட்டுக்கு ஒரு மலராக எடுத்தான்
தொடுத்தாள்
ஒன்றிரண்டு மூன்று நான்கென்று
தொன்னூறைத் தொட்டதற்கு துள்ளிற்று
கம்பர் மனம்
கூத்தர் மனம் குதித்தது கொலையிலிருந்து
மீட்டோமென்று
இன்னுமொரு பாட்டுக்கு இருப்புக் கொள்ள
வில்லை அவளுக்கு
காப்புச் செய்யுளையும் கணக்கில் எடுத்து
விட்டாள்
நூறு முடிந்ததென்று சபையதிர வந்து
நின்ருள்
மன்னவனை வென்று விட்ட மயக்கத்தில்
மங்கையவளை பெற்றுவிட்ட கிறக்கத்தில்
தன்னை மறந்தான் தலையலங்காரம்
புறப்பட்டதென
கொலையலங் கோலத்துக்குப் பாடிவிட்டான்

ஆன்ருேர்கள் நூற்றுக்கு ஒன்று குறை என்ருர்
வேந்தன் சிரித்தான் விதியும் சிரித்தது
கம்பர் அழுதார் காலம் அழுதது
நீதியும் நியதியும் அவன்தலையை விலைகேட்டது
குலோத்துங்கன் பேசவில்லை கொடுவாள்
பளபளத்தது
அவன்சாவதற்கு சாவேன் என்ருள் அமராவதி
கல்லறை இரண்டுக்குக் கல்லடுக்கச்
சொன்ஞன்
எதிர்சொல்லவாயில்லை! இருவரையும் உயிர்
பறித்தார்
கம்பர் உயிர் கொதித்தார். தமிழும்
தழலானது
என் மகனேடு உன் மகளும் போனுள் அந்தோ
தார்வேந்தே வேரற்றுப் போனதடா உன்
குலம்
மன்னவனும் நீயோ வளநாடு உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்.
திருபுவனம் முழுதுடைய குலோத்துங்கச்
சோழனே
முடிவில் நீயும் ஒரு பிடி சாம்பல்
உணர்ந்திலையே
எரிகின்றேன் நெருப்பில்லை இருக்கின்றேன்
உயிரில்லை
தமிழிருக்கும் வரை நானிருப்பேன்,
தரையிருக்கும் வரை நின்பழி இருக்கும்
என் தவம் இருக்கும் வரை நின் குலம்
அறுக்கும்

வெறி கொண்டு சொன்னரோ
வீறு கொண்டு எழுந்தாரோ
கம்ப மதகளிறின் கட்டுத்தறி அறுந்ததம்மா
காலம் சென்றதோ காலன் வென்ருனே
நாட்டரசன் கோட்டையிலே ராமாயணப்
பாட்டரசன் துஞ்சினன் என்பார் என்ப
மானிடக் கம்பனுக்கு வயது நூறே எல்லை
காவியக் கம்பனுக்கு காலக் கணக்கில்லை
சாவில்லை இருக்கின்ருர் சரித்திரப் புகழாக
யாமறிந்த புலவரிலே கம்பரைப் போலில்லை
என்று
வள்ளுவர் இளங்கோ வரிசையிலே வைத்து
நல்ல தமிழ்ப் பாரதியும் சொன்னன் என்ருல்
நான்என்ன பெரிதாகப் புகழ்ந்திடுவேன்
வணங்குகின்றேன்
உலகத்து இலக்கியப் பேர் அரங்கில்
தமிழனும் இன்று தலைநிமிர்ந்து நிற்பதற்கு
வாய்ப்பளித்த கம்பநாடன் வாழியரோ!

# இறைவன் சிரிக்கிறான்

## வாரியாரின் வாழ்த்துரை

உ

முருகா

நேரிசை வெண்பா

வாழி ஏ. கே. வேலன் வண்மை நிறை அச்சகம்
ஏழிசைபோல் ஓங்கி இதமாக—காழியுறை
கந்தன் கருணையினால் கற்றவர்கள் பாராட்டச்
சந்ததமும் வாழ்க தழைத்து.

— கிருபானந்தவாரி

※

## கடவுள் வாழ்த்து

திருமலையில் உனக்கு நாமமிட்டாலும்
தென்மலையில் உனக்குத் திருநீறிட்டாலும்
தில்லையில் நீ ஒற்றைக் காலில்நின்றாலும்
எருசலத்தில் நீ சிலுவையைச் சுமந்தாலும்
மக்கத்தில் உனக்குச் சிலையே இல்லையென்றாலும்
இறைமகன் எனக்கு நீ ஒருவன்—ஒருவனே

## என்னுரை

இழுக்குடைய பாட்டுக்கு இசைநன்று இலக்கண
வழுக்குடைய பாட்டுக்கு இனிய தமிழ் நன்று
கிழக்கும் அது நின்ற கிழக்கிற்கு மேற்காகும்.
வழக்கியலே இலக்கியமாய் இலக்கணம் வகுப்ப
துண்டு.

மதங் கொண்ட யானையை அங்குசத்தால் அடிப்பார்
மதங் கொண்ட மானிடத்தை திடங்கொண்டு மிதித்த
கிரேக்கத்துப் பெரியவர் சாக்ரட்டீசிலிருந்து
ஈரோட்டுப் பெரியார் வரை எனக்கினியவரே.

எம்மதமும் சம்மதம் என்பதற்கு மேலாக
தன் மதங் கொண்டு தடுமாறுகின்ற
உன்மத்தர்க்குச் சொல்வேன், உண்மையே நன்மதம்
செம்மையே தெய்வ சம்மதம் எனத்தெளிக.

## இறைவன் சிரிக்கிறான்

கதிரவன் வருகைக்கு கமலங்கள் சிரிக்கின்றன.
வெள்ளி நிலவுக்கு அல்லிசிரிக்கின்றது.
அள்ளித் தெளித்த பனித்துளிகள் எனவே
சிந்திய பவள மல்லிகள் சிரிக்கின்றன.
மண்மகள் சிரிக்கின்றாள் மல்லிகையாக
மலைமகள் சிரிக்கின்றாள் வழியும் அருவியாக
அலைபுரளும் வெண்ணுரை கடல் மகளின் களிப்பே
வானும் சிரிக்கின்றது, விண் மீன் குலங்களாக
பயிர்க்குலம் சிரிக்கின்றது கதிர்மணிச் சரங்களாக
இயற்கையின் சிரிப்பே இவ்வுலகின் செழிப்பு
மற்ற உயிர்களுக்கில்லா தனிச்சிறப்பு
மனிதன் ஒருவனே சிரிக்கத் தெரிந்தவன்
இவனைப் பார்த்து இறைவன் சிரிக்கின்றான்
ஏனோ ஏனோ இரங்குகின்றேன்.
எறும்புக்கும் புற்றுண்டு எலிக்கும் வளையுண்டு
குருவிக்கும் கூடுண்டு குகையுண்டு விலங்குகட்கும்
தலைசாய்க்க இடமில்லா மனிதனுண்டு. ஏனோ
இவனைப்பார்த்து இறைவன் சிரிக்கின்றான்.
மயிலுக்கும் உடுத்த வண்ணத் தோகையுண்டு
கரடிக்கும் போர்த்தக் கம்பளியுண்டு
செம்மறிக்கும் மெத்தென்றடர்ந்த ரோமமுண்டு

கோழிக்கும் மானங்காக்கச் சிறகுண்டு
புல்லும் புறவிதழால் தன்னை யுடுத்தும்
ஆடையின்றி வாடும் மனிதனுண்டு. ஏனோ,
இவனைப் பார்த்து இறைவன் சிரிக்கின்றான்.
காற்றிலே ஏறி விண்ணை அளப்பான்
ஆற்றைத் தேக்குவான் அலைகடலில் மிதப்பான்
மண்ணும் தனக்கே சொந்த மென்பான்
ஒருநாள் மண்ணுக்கே சொந்தமாவான்
இவனைப் பார்த்து இறைவன் சிரிக்கின்றான்.
காயை கறிவைப்பான் கனியில் சாறெடுப்பான்
கரும்பை பிழிந்து கற்கண்டு ஆக்குவான்
நெய்யில் பொறிப்பான் நீராவியில் பொங்குவான்
ஆறு சுவையிலும் அருந்தத் தெரிந்தவன்
ஐயா பசியென்று கையும் ஏந்துவான்
இவனைப் பார்த்து இறைவன் சிரிக்கின்றான்.
அறிவில் பெரியது ஆறுவது என்பான்
அறிவினால் அனைத்தையும் ஆக்குவேன் என்பான்
கல்லிலும் செம்பிலும் கடவுளைப் படைப்பான்
வேதாந்த சித்தாந்த விளக்கம் சொல்வான்
உலகக் கணக்கெல்லாம் ஒரு நொடிக்குள் படிப்பான்
ஆனால் தன் கணக்குத் தனக்குத் தெரியாது
இவனைப்பார்த்து இறைவன் சிரிக்கின்றான்.

# மூத்தபிள்ளை

ஓங்காரக் கையனே வெண்பிறைக் கொம்பா
நீலக் கடலில் நீந்தி எழுந்து
மூலக்கனலில் மூண்ட கொழுந்தே
நான் மணி மாலை சூடிய நாயகமே

பாரதிக்கினிய பாண்டித் துரையே
மணக்குள விநாயகா மனத்துள நாயகா
முனியரையன் மாபாரதம் முடி போட்டுச் சொல்ல
பனிவரையில் தன்கொம்பெடுத்து வரைந்த தம்பிரானே

ஆலடி அரசடி ஆற்றடி கிணற்றடி
ஊரடி தோறும் உறவாடும் பிள்ளாய்
தாய்க்கு மூத்தவனே தந்தைக்கு முன்னவனே
தம்பிக்கு இளையவனே தும்பிக்கை யனேதுணை.

## வயலூர்

அருணகிரிக்கு அடியெடுத்து கொடுத்தோனே
அடியேனுக்கு ஒருவரி எடுத்துக் கொடுத்தால்
சங்கத் தமிழ் எடுத்து உன்னைப் பாடேனோ
சங்கடங்கள் தீர்ந்து நானும் வாழேனோ

வயலூரும் விழியாளே வள்ளிப் பெண்ணே
வயலூரும் மொழியாளே தெய்வச் செல்வி
வயலூரும் பெருமானே வயலூர் அரசே
வயலூரும் மனத்துக்கு அமைதி அருள்வாயே

## கந்தகிரி

பழம்இல்லை யென்று பழம்நீயான தெய்வமே
செழித்து வளரும் சேலத்து மாந்தோப்பில்
பழுத்துக் குலுங்கும் பழத்துக்கு வந்தாயோ
வழுத்தும் அடியார் வரத்துக்கு வந்தாயோ

கன்னிமார் ஓடைக்கு வள்ளி வருவாளென்று
புள்ளிமான் துரத்த வள்ளலும் வந்தாயோ
சேவலங் கொடி பிடித்து சேலமலைக் கெழுந்தது.
குறிஞ்சிமலர் பறிக்கவோ குறமகளைப் பிடிக்கவோ.

சிக்கலிலே வேல் வாங்கி செந்தூரில் போர் முடித்த
களைப்புந் தீரவே கந்தகிரிக்கு வந்தாயோ
தணிகையிலே மனமும் ஆறமல் தரியாமல்
சாந்தானந்தச் சாரலுக்கு எழுந்தாயோ

குன்றேறி நின்றெரியும் தெய்வத் திருவிளக்கே
என்மனக் குகையின் இருளகற்ற வாராயோ
நாடிவரும் அடியாரைத் தேடிவரும் முருகோனே
பாடிவரும் அடியேனின் பாடு தீர்த்தருள்வாயே

# பழனி

## 1

தேனுக்கு அதிபனும் தென்பழனித் தெய்வமே
தானுக்கு ஆயிரம் தலைவணங்க வந்தேன்
கோனுக்கு நின்அடியார் ஆளானது போதும்,
வேளுக்குப் பெயர் விளங்க வாரி வழங்குதியே

இளநீரும் பன்னீரும் குளிர்சாந்தும் கொண்டு
நாளுக்கு ஆயிரம் முழுக்கு ஆடினால்
நளிர் கொள்ளும் என்று ஞான பண்டிதனே
முண்டிதன் ஆகி முழு நீறணிந்தனையோ

செம்பியரும் சேரர் குலத்து நம்பியரும்
அம்புலியின் வழி வந்தோரும் இன்றிலை அதனால்
தும்பிக்கை பெருமானுக்கு இளையவனே உன்னை
நம்பி வந்தோம் நல்ல தமிழ் கொண்டு

ஆற்றுப்படை சொல்ல நான் நக்கீரன் அல்ல
ஆற்றலைப் பாட நான் அருணகிரியுமல்ல
ஆசி வழங்க நானவ்வையுமல்ல
ஆசையால் அழைக்கின்றேன் ஆறுதலை, காண

முருகனே முதல்வனே முத்தமிழ் அழகனே
செந்தமிழ் மறவனே இந்திரன் மருகா
மயிலேறும் பெருமாளே வள்ளிக் கணவா
சங்கத் தமிழெடுத்து வாழ்த்துகின்றேன்
சங்கரி மகனே சண்முகனே வருக

## 2

பழனிமலைத் தங்கமே உன்னைக் காண
பைந்தமிழ்ப் பிள்ளை நான் பரிந்து வந்தேன்
தங்க ரதமேறி வரும் சிங்கார வேலனுக்கே
சங்கத் தமிழாலே ரதம் ஒன்று செய்து வந்தேன்.

2

பாண்டியன் சங்கத்துக்கு நீ தலைவன் ஆனாலந்த
பசுந்தமிழுக்கு நான் புலவன் அல்லவோ
செந்திரு மகளுக்கு நீ மருமகன் ஆனால்
செந்தமிழ் அன்னைக்கு நான்மகன் அல்லவோ

தழல் பழுத்த கனியே தண்டபாணி நின்
தயை பழுத்தால் தழைத்து மனம் பழுத்திட மாட்டேனோ
தினைப்புனத்து ஆத்தாளே, தேவர் தவக்கொழுந்தே
வினைப் புனத்தில் என் பகையை வேரறுக்க வருவீரே

3

செந்தழலில் பழுத்த சிவம்
தென்பழனிக் குன்றினில்
நின்றதென்ன கோலமோ
கொண்டதென்ன கோபமோ
வீரம் ஒரு வடிவானதோ
ஈரம் அதன் முடிவானதோ
சூரனை மாய்த்திட்ட தீரனே
குழந்தை வடிவேலனே

4

பழனியில் நீ பண்டாரமாய் நிற்கின்றாய்
பரங்குன்றில் பெண்டாட்டிமார் இருவர் இருக்கின்றார்
நீ என்ன சம்சாரியா? சன்யாசியா?
முருகா! திருமால் மருகா!

ஒரு சமயம் அப்பனிடம் அழுது பழங்கேட்கின்றாய்
ஒரு சமயம் அதட்டி அப்பனுக்கே பாடம் சொல்கின்றாய்
நீ என்ன ஆசானா? ஆசை மகனா?
முருகா! திருமால் மருகா!

ஒருபெயரால் முத்துக் குமரன் என அழைக்கின்றார்
ஒருபெயரால் குறிஞ்சிக் கிழவன் என ஓதுகின்றார்
நீ என்ன கிழவனா? குமரனா?
முருகா! திருமால் மருகா!

## பழமுதிர்சோலை

வளங்கொஞ்சும் பழமலையில்
குறவஞ்சி உறவாட
சினவேங்கை மரமான
கிழவேட வடிவேலா
கடல் சுவர குன்றுருவ
நெடுவேலெடுத்த குமரா
கடமைகள் நடந்தேற வரவேணும்
மயிலேறும் பெருமானே.

## திருத்தணி

தணிகைமலைச் செல்வமே தமிழ்ப் பெருங்கடலே
வணிக மனத்தோடு உன்னை வழி பட்டேனே
நினைவில் உன்னை நிறுத்தாமல் நிசமனம் அலைந்ததோ
இனி உய்ய வழி என்ன பன்னிருகைப் பெருமானே !

## திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றினில் விருப்புடன் இந்திரன்
திருக்குமரியை மணந்த திருப்புகழ் செல்வனே
பொருட்பிடம் சிறைநின்ற தமிழ்க்கீரனை மீட்டவனே
நிரப்பின்றி நான் வாழ வருக வருகவே.

## அண்ணாமலை

அருணகிரியின் தமிழுக்கு ஆடிவந்த மயிலே
கருணை பொழியும் முகிலை காணவே வந்தேன்
தருணம் அறிந்து அந்த சண்முகனுக்குச் சொல்லாயோ
சரண கமலங்களைப் பற்றிட எனக்குத் துணையாக
நில்லாயோ.

சங்கெடுத்து நீராட்டி சந்தனக் காப்பிட்டாரோ
சங்க தமிழெடுத்த தாலாட்டில் தளைப்பட்டாயோ
மங்கை வள்ளி மயக்கத்தில் வயப்பட்டாயோ
சங்கரன் மகனே சரவணனே வாராயோ

## வடபழனி

வடபழனி என் அருகிருக்க வருவதில்லை நானே
வரமருளும் திறமிருக்கும் நீ வராதிருப்பதேனோ !
ஔவைக்கு சுட்டபழம் கொடுத்து அன்னாலே நீ
கற்றது அரியதும் பெரியதும் அன்றோ !
கீரனைச் சிறைமீட்டது சும்மாவோ ஐயா !
பத்துப்பாட்டில் முதற்பாட்டு உனக்கே !
அன்று நீ அருணகிரிக்கு அடியெடுத்துக் கொடுத்தாய்
இன்று பலநூறு திருப்புகழ் பாடுகின்றது உன்னை
பின்னும் ஒரு ஊமையை பேச வைத்தாய்
குருபரன் ஆனான், கலிவெண்பா சொன்னான்
வடலூர் பிள்ளையை வள்ளல் ஆக்கினாய்
பல்லாயிரம் அருட்பா பாடினார் உனக்கே.
பாம்பனடிகள், பகழிக்கூத்தன் முதலாக
பலநூறு ஞானியரும் பாடினார் பாடினார்
வேலனும் சில்வரிகள் எழுதினேன் எழுதினேன்
வீரையின் மகனே நின்னருள் என்னவோ

## ஏரகம்

வாலைக் குமரியவள் வயிறு வாய்க்காமல்
தந்த மகனே கந்தையா தந்தைக்கு நீ சொன்ன தென்னையா?
போர்க் களத்தில் அவுணர்களைப் புறங்கொண்ட வேலையா
ஏரகத்து வீரையா எனக்கினி வேறு யாரையா

## செந்தூர்

அலையாடும் கரையருகே விளையாடும் தமிழழகா
படையாறு வீடாக களையாறும் இளையோனே
தினையோடு தேனன்ன இளையாளை நயந்தாயே
வினைமாள வருகின்ற எனையாளும் பெருமானே !

# திருவேற்காடு

பொற்கோட்டு இமவான் மகளே புவனேசுவரி
அம்பிகே, துர்க்கா அங்காள பரமேசுவரி
சங்கரி நந்தினி சவுந்தரி ராஜேஸ்வரி
ஓம் சக்தி பராசக்தி உமா மகேசுவரி
கங்கா பவானி கௌரி கௌமாரி
வான்மாரி பொய்ப்பினும் வரன்மாரி பொய்க்காத
கருமாரித் தாயே காரணத்தின் காரணியே
ஆரணத்தின் பெரும் பொருளே நாரணர்க்கு இளையவளே
நல்ல தமிழ்ச் சுவை அமுதே நாராயணி
ஓங்கார வடிவே ஆங்கார வல்லி
ஊங்கார தொனியே ரீங்கார வல்லி
கதிராய் நிலவாய் காய்கின்ற ஒளிச்சுடரே
கனலாய் புனலாய் காற்றாய் வெளியாய்
மணலாய் மலர்ந்த சரா சரமே
அம்மே நின் பெருமை பேசவல்லேன் அல்லேன்
சிரித்தே புரமெரித்த சிவனார் நினது
பேரழகு மயக்கத்தில் பித்தன் ஆகி
எலும்பும் அரவும் எருக்கும் அணிந்து
சுடலையில் நடம் புரியும் கூத்தன் ஆனால்
அழகின் சிரிப்பே அறிவின் விளக்கே
அன்பின் பெருக்கே அருளொழுகும் பெண்மையே
அம்மையே நின்னை நான் எவ்வாறு பாடுவேன்
வெற்றி வெல்போர்க் கொற்றவையே நற்றமிழே
நெற்றிக் கண்ணனுக்கு இனிய நேரிழையே
வெற்றி மேல் வெற்றிதர வேண்டும் அம்மா
மூத்த பிள்ளைக்கு மூலாதாரம் கொடுத்தாய்
இளைய நம்பிக்கு வடிவேல் கொடுத்தாய்
காழியர் பிள்ளைக்கு ஞானப்பால் கொடுத்தாய்
கம்பனுக்கு கன்னித் தமிழையே கொடுத்தாய்
அம்மையே இந்த உலகாளப் பொருளும்
அந்த உலகாள அருளும் தர வேண்டுகிறேன்
திருவேற்காடு அமர்ந்தவளே செங்கமலவல்லி
தாயே உமையே மகாமாயே சரணம்.

# தேவி கருமாரி

தென்னவன் மதுரைக்கும்
முன்னவன் கைலைக்கும்
தென்குமரி எல்லைக்கும்
தலைவி--அவள்
தேவி எங்கள் கருமாரி

திருஞான சம்பந்தர்க்கு
பாலும், தில்லை.
குருஞான சம்பந்தர்க்கு
சோறும் தருவாள்
தேவி எங்கள் கருமாரி.

அறங்கள் முப்பத்திரண்டும்
வளர்ப்பாள்
அரன் பிச்சை எடுப்பதையும் பொறுப்பாள்
தேவி எங்கள் கருமாரி.

தொண்டர் உள்ளத்துள்ளும் ஒடுங்குவாள்
அழகே வடிவான செல்வி
அகோர உத்ரகாளியும் ஆவாள்
தேவி எங்கள் கருமாரி.

பூத்துச் சிரிப்பாள்
மலர்க் கூட்டமாக
பொங்கிச் சிதறும்
எரிமலையும் ஆவாள்
தேவி எங்கள் கருமாரி

பேசுகின்ற மொழியெல்லாம்
அவளே ஆவாள்
பேசாத ஊமையாக
கொலுவும் இருப்பாள்
தேவி எங்கள் கருமாரி

பிரணவத்தை ஒரு பிள்ளை
ஆக்கிப் பார்த்தாள்
சரவணத்தில் ஒரு பிள்ளையை
அள்ளி எடுத்தாள்
தேவி எங்கள் கருமாரி.

சிவனுக்கு ஆகத்தில்
ஒரு பாகத்தைக் கொடுத்தாள்
சிங்க வாகனத்தாள் திருவேற்காட்டாள்
தேவி எங்கள் கருமாரி.

## மதுரை மீனாட்சி

காஞ்சியிலுன்னை காமாட்சி என்பர்
காசியில் விசாலாட்சி என்றழைப்பர்
மதுரையில் உனது திருப்பெயர் மீனாட்சி
மைலையில் நீயே கற்பகவல்லி

ஒற்றியூர் இட்ட பெயர் வடிவுடைநாயகி
தெற்கு முனையில் கன்னியா குமரி
தில்லையில் அன்னை சிவகாம சுந்தரி
திருக்கடவூரில் அபிராம சுந்தரி

ஆனைக்காவில் அகிலாண்டேசுவரி
நாகைக் காரோணத்தில் நீலாயதாட்சி
மேலைமலைக் கொல்லூரில் மூகாம்பி
மைசூர் மலையில் மாகாளி சாமுண்டி

சமயபுரத்தில் செந்தூர மாரி
தஞ்சை நல்லூரில் சஞ்சீவி மாரி
பெரிய பாளையத்தில் வேப்பிலைமாரி
திருவேற்காட்டில் தேவி கருமாரி

தலத்துக்கு ஒரு பெயர் தவத்துக்கு ஒரு கோலம்
தாங்கி நிற்கும் தாயே உமையே
வேங்கையின் மேலிருக்கும் வீரையே சரணம்

## 2

தென்னவன் மகளே செந்தமிழ்ச் செல்வமே
முன்னவன் முதலே மூவா மருந்தே
பாண்டிமாதேவி பங்கயச் செல்வி
மங்கையர்க்கு அரசி மரகதவல்லி
அங்கயற்கண்ணி அறம் வளர்த்த நாயகி

பார்வதி தாயே பகவதி நீயே
மாரியே தாயே மாகாமாயி நீயே
மாரி என்றால் மழை என்பார்
மழையென்றால் ஈரமென்பார்

தாய் என்றால் தயை என்பார்
தயை என்றால் கருணை என்பார்
ஈரமும் கருணையும் எங்கே அம்மா
அன்றொரு நாள் சம்மந்தன் அழுதகுரல் கேட்டு

பால் கொடுத்த அன்னை பரமேசுவரி நீயன்றோ
குமர குருபரன் பாட்டுக்கு உருகி
குழந்தையாய் வந்த கோமளம் யாரம்மா
குருஞான சம்பந்தன் பசிக்கு சோறெடுத்த

தில்லை சிவகாம சுந்தரியே என் தாயே
கம்பன் கவிக்குப் பந்தம் பிடித்து
தமிழைப் படித்த தையலே மாகாளி
பட்டன் உரைத்த பொய்க்குப் பொருளாய்

நிலவை எரித்த நீலியே அபிராமி
அழுகின்ற குழந்தைகட்கு அன்னையும் ஆனவளே
கொஞ்சுகின்ற தந்தையர்க்கு குழந்தையும் நீயன்றோ
பெற்றவளே பெரியவளே

பேருலகை எல்லாம் படைத்தவளே கற்றவளே கரியவளே
கருணை உள்ளம் படைத்தவளே
நற்றவளே நல்லவளே
நாளெல்லாம் நன்மை செய்பவளே

உற்றவளே உரியவளே
உண்மையை என்றும் வாழவைப்பவளே
சங்கரன் மனையே ஐங்கரன் தாயே
சந்ததமும் எனக்கருள் புரிவாயே

## அப்பர்

வானல் புகழளந்த வாகீசப் பெருமானே
தேனல் தமிழளந்த செந்நாப் புலவனே
நானல் உயிரழிந்த நாள் காண வந்தேன்
ஊனல் ஊண் வளர்த்தேனை மன்னித்தருளாயே

நீற்றறையில் சுட்டெரித்தார் நெடுங்கடலில் பூட்டிவிட்டார்
மாற்றரிய நஞ்சூட்டினர் மதகரியை மூட்டிவிட்டார்
சாற்றரிய கொடுமைகளை வெற்றி கண்டாய்.
போற்றரிய புகலூர் அரசே வாழி.

கல்லும் கனிந்து மிதந்து கரையேற
சொல்லும் தமிழென்ன சொல்லுவீர் ஐயா
கொல்லும் வினைக்கு மருந்தென்று வந்தேன்
செல்லும் வழிக்கு துணையான தெய்வமே

## திருப்பதி

ஏழுமலையாண்டவனே எங்கள்
திருவேங்கடவா
சூழுகின்ற துயரங்களைத் துடைக்கின்ற
பெருமானே
வாழுகின்ற உயிர்கட்கெல்லாம்
உயிராக ஆனவனே
தாழுகின்ற நேரத்திலெல்லாம்
தாங்குகின்ற தெய்வமே

காலை மலரு முன்னே கதிரவன் எழு முன்னே
நான் முன்னே நீ முன்னே என்றே நாடுவார்
திருமறைகள் நான்கும் தேடக்கிடைக்காத
அருப்பொருளைத் திருமலையில் மெய்மறந்து தேடுவார்

பனிரெண்டு ஆழ்வார்களும் பாடிய பின்னே
அண்ணலே உன்னை என்னென்று பாடுவேன்
கரந்த மாட்டின் காம்பைச் சுவைக்கின்ற
கன்றானேன் கருணை பெரிதுடையவனே
கணக்கில் வரவு வைத்துக் கொள்.

2

நாலாயிரம் தமிழ் கேட்ட நல்ல பெருமானே
பாலாழி துயின்றிருக்கும் பரம் பொருளே
நானும் ஓராயிரம் சொல்ல வந்தேன்

கம்பன் தமிழுக்கு தலை மகளும் கிழமகளாய்
கொட்டிக் கிழங்கெடுத்து கூவி விற்றாள்
கணிகண்ணன் தமிழுக்கு கச்சி மணிவண்ணன்
பைநாகப்பாய் சுருட்டிப் போனான்

சுந்தரன் தமிழுக்கு சிவன்தூது நடந்தான்
மாதவூரன் தமிழுக்கு நரியும் பரியானது
அப்பரின் தமிழுக்கு கல்லும் தெப்பமானது
சம்பந்தன் தமிழுக்கு எலும்பு பெண்ணானது
ஔவையின் தமிழுக்கு ஒருபனந்துண்டம்

பங்குக்கு மூன்று பழம் தந்தது
அருணகிரியின் தமிழுக்கு முருகன்
கம்பத்து இளையனாய் காட்சிக்கு வந்தான்
வடலூரர் தமிழுக்கு தண்ணீரில் விளக்கெரிந்தது

கடலூர் தமிழுக்கு இருள்நாளில் நிலா வெரிந்தது
வெங்கடவர்க்கு என் தமிழ் கேட்க நேரம் இல்லையோ
என் இதயத்தில் தமிழ்தான் இல்லையோ
வேண்டுவார் வேண்டுவன தருகின்ற பெருமானே
என் வினை தீர்த்து ஆளவேண்டுகிறேன்

3

வேங்கடத்துப் பெரியவனே
மாயவனே ரமணா நீ
மாலவனோ வேலவனோ மாதவனோ
யாரறிவார்
கோடி கோடி பக்தர் உன்னைத்
தேடித் தேடி வருவார்
கோவிந்தா கோவிந்தா என்று
கூவி கூவி அழைப்பார்

## காண்டீபன்

உருவுகள் பலவாயினும் நீ ஒருவனே!
உறவுகள் பலவாயினும் நானும் ஒருவனே
உரிமையோ தனிவேறு ஆகின்றது அறிகின்றேன்
உறவு முறையில் புரியாத முரண்பாடு ஏனோ
அப்பனுடன் பிறந்தபெண் அத்தை ஆவாள்
அப்பனுடன் பிறந்தவனை சித்தப்பன் என்பார்
சித்தப்பன் மகள் எனக்கு தங்கை
அத்தை மகளோ தாரம் ஆகின்றாள்
அண்ணன் மகள் எனக்கும் மகளே
அக்காள் மகள் மனையாள் ஆவதென்ன?
உறவுமுரனோ உணர்வு முரணோ?
என வினவினன் பார்த்தான் வியந்தான் கண்ணன்

## கண்ணன்

முன்னோர் வகுத்த கணக்கைத் தொகுத்துப்பார்
வித்து முளைத்து வேர் கொள்ள நிலம்வேண்டும்
மண்ணின் வளத்துக்கே பயிரும் தழைக்கும்
ஒரு நிலத்தில் வித்திட்டு மறுநிலத்தில் நடுவார்
வித்து நாற்றான மண்ணில் நடப்படுவதில்லை
அத்தை உன் ரத்தம் வித்திட்ட மாமன் வேறு
சித்தப்பன் உன்ரத்தம் வித்தும் உன்னினம்
அக்காள் உன்ரத்தம் அவள் கணவன் வேறுவழி
அண்ணன் உன்ரத்தம் அவள் வித்து உன்வழி
ஓரின வித்தின் உறவு தவிர்க்கவே
கொண்டு கொடுக்க வரன்முறை வகுத்தனர்
கோத்திர முறை யென்று குறித்தனர் மேலோர்
ஆயிரம் கூறினேன் அறிவு தெளிந்திலையோ
அறியாமை பேரிருளில் தடுமாறும் அந்தகனே

ஆசைத் தீயில் வெந்தது போதுமடா
அச்சத்தை வளர்த்து கவலை கொடுத்து
பாசத்துக்கு ஆணிவேர் ஆகும் உணர்வு
காம வெறிக்கு கண்ணை மறைத்தும்
சினத்தின் பிறப்பிடம் ஆகும் சிற்றுணர்வு
மயக்கப் படுத்தும் மானத்தை வாங்கும்
புத்தியைக் குறைத்து புலன்களை அழித்து
அறிவழிந்து நிலை குலைந்து நிற்கவைக்கும்
பெரும்பித்த உணர்வுக்குப்பேர்தான் ஆசை
அலைத்துக் கேட்கும் அதுவே வழித்தடம்

**காண்டபன்**

ஆசை தீதென்று அறிக்கையிடும் பெருந்தகையே
கோகுலத்தில் நீ ஆடிய ஆடல் என்னவோ?

**கண்ணன்**

வெண்ணை திருடினேன் அது சின்ன வயது
சிற்றாடைக் கட்டத்தெரியாத இளம் சிறுமியர்
மேலாடையைப் பறித்தேன் இதிலென்ன கண்டாய்?
மங்கையர் உச்சிமோந்த மழலைப் பருவமடா
உறிகளை உடைத்தேன் உரலில் கட்டுண்டேன்
மாடு கன்று மேய்த்தேன் மடுவில் குதித்தேன்
என்பது இந்த உலகத்துக்கு மாயை
என்னைப் பொறுத்தவரை அனைத்தும் கர்மமே
ஞானம் ஒன்றித்த செயற்பாடு அறிக.
என் அத்தை ராதை தவத்தின் தலைமகள்
காமத்தை வென்று விட்ட யோகி
தியானத்தில் மூழ்குவாள் நான் தேவன் என்பதால்

அவள் சிந்தையில் கலந்திருந்தேன்
தெய்வ நினைவில் தெய்வம் ஆனவள்
அள்ளி எடுப்பாள் ஆரத் தழுவுவாள்
நான் வாலிபனல்ல பாலகிருஷ்ணன்
கேலிக்கு உரியவர்கள் கேளிக்கை என்றார்
ஞானியரோ குழந்தை என்று கொஞ்சுவார்
காதலியராகி கசிந்து உருகுவார்.

தலைவனாய்க் கொண்டுதொண்டராய்த் தொடருவார்
என்னை நினைந்து நினைந்து நானே யாவார்;
முகத்திரண்டு கண்ணும் மூடிகிடக்க
அகத்திருக்கும் கண்ணால் அகிலத்தை அளப்பார்
நீர்வளரும் தாமரை நீரால் நனைவதில்லை
ஞானியரும் உலகிலிருப்பார் உலகில் கலப்பதில்லை
நீரோடு கலந்த பால் தன்நிலை இழக்கும்
நெருப்பிலே சூடுண்டால் நெய்யாகப் பிரியும்
நெய்யான பின்னே நீரில் மிதக்கும்
மாய வலையில் இருக்கும் மானிடரும்
ஞானம் கைவந்தால் ஞாலத்தில் மூழ்கார்
எங்கும் எதிலும் இறைவனைக் காண்பார்
மலை முகட்டில் நின்று நிலம் நோக்கினால்
வானுயர வளர்ந்த நெடிய மரமும்
தரையிலே தாழ்ந்து படர்ந்த கொடியும்
பசுமையாகத் தெரிவதன்றி பேதம் தெரிவதில்லை
ஞானிக்கு அச்சுதனும் அர்ச்சுனனும் ஒன்றே
மனிதனும் மிருகமும் நண்பரும் பகைவரும்
வேறாகத் தெரிவதில்லை. விதியைவெல்லுவார்
என்னைச் சரணடைந்தால் ஞானம் கைவரும்
உன்னோடு நானிருக்கிறேன் என்னோடு நீயில்லை
தேர் நடத்த வந்த என்னைத் தெரியவில்லை
போர் நடத்த மயங்குகின்றாய் ஏனோ?

## காண்டீபன்

ஞானியோ யோகியோ யாரறிவார் உன்னை?
மாதவனை யாதவன் என்றே நினைக்கின்றேன்
ஞாலத்தின் பிடி என்னை விடவில்லை
பந்தங்களை அறுக்கத் தவமிருக்க நேரமில்லை

## கண்ணன்

தனித்திருந்து தன்னை வருத்துவது தவமோ
உலகத்துக்கு உதவாமல் ஓடி ஒதுங்கி
வனத்திருந்து தேவரை வரம் கேட்பது தவமோ
மனத்திலென்னை நினைத்திருப்பதே மாபெரும் தவம்
சொல்லால் என் பெயரைச் சொல்லிச் சொல்லி
அருமைப் பாட்டுடன் உருகுவது பெருந்தவம்
செயலின் பயனைக் கருதாது நீ
செய்யும் தொழில் அனைத்தும் தவமே
போர் முனையில் பகைவரைக் கொல்லுவதும் தவமே
என்னை நினைந்து நீ ஓரடி எடுத்து வைத்தால்
ஏழடி நான் தொடர்ந்து வருவேன்
கேளடா உன் குழப்பம் தீரச்சொல்வேன்
துறவென்பார் துவராடை தரிப்பார்
துளப மணியணிந்து தோத்திரம் படிப்பார்
தலங்களை வலம் வருவார் அது ஒரு துறவோ!
பற்றறச் செய்யும் பணியெல்லாம் துறவே
வரவு செலவு உபரி இழப்பு
கூட்டல் கழித்தல் கணக்கில் நில்லாமல்
தொழில் படுவதும் துறவெனக் கொள்க
உலகத்தோடு உழன்றாலும் சுழன்றாலும்
ஓடும் புளியுமாக உலர்வதே துறவு
பலனைக் கருதாமல் படுகின்ற பாடும்
பந்தம் சொந்தம் அறுவதும் துறவே
ஞானியினும் பெரிய துறவி இல்லை

யோகி என்றும் அவனைச் சொல்லுவார்
விரைந்து சுழலும் சக்கரம் அதி வேகத்தால்
ஓய்ந்து அசைவற்றிருப்பது போலிருக்கும்
யோகியும் மோனத்திலிருப்பான் தோற்றமே
ஞானக்கடலில் முத்துக் குளிப்பான்
தெய்வம் அவனோடிருக்கும் தேவனும் அவனேயர்வான்
ஆக ஆசையைவென்று பாசத்தைக் கடந்து
காமத்தை எரித்து குரோதத்தை விட்டு
புலனை அடக்கி புத்தியில் தெளிந்து
தொழிற்படுக மகனே தொழிற்படுக
தன்னை வென்று தலைவன் ஆவாய்
புறப்பார்வையற்று உள் நோக்கிப் பார்
உன்னை அறிவாய் என்னையும் உணர்வாய்
நீயும் நின் நினைவும் நானே யாவேன்
முனிவனும் ஆவாய் முக்தனும் ஆவாய்
வேள்வி என்பதையும் விளக்குகின்றேன்
மற்றவர்க்கு ஆற்றும் தொண்டு வேள்வி
உண்ணுவது உடுத்துவது உனக்கென்றில்லாமல்
எனக்கென்று அர்ப்பணித்தல் வேள்வி
எத் தொழிலை செய்து ஏதவத்தை பட்டாலும்
இறைவன் செயல் என்று இருப்பதும் வேள்வி
நெருப்பிலே நெய்யிட்ட ஓமத்தீயினும் பெரிது
ஞானத் தீயில் புடமிட்ட நற்கருமம்
பாண்டு மகனே என்னை வேண்டுவதும் வேள்வி
பிறவிப் பிணிக்கு பெரிய மருந்து
கல்வி ஞானம் கடுந்தவம் இல்லாது
இறைவனை பிடிக்க எளிதான வழியுண்டு
எடுத்துக்காட்ட சில சொல்லுகின்றேன்
ராமனைத்தொடர்ந்து வனம்போன இலக்குவனும்
ராமனைத் தொடாந்து மனம்போன பரதனும்
கொண்டிருந்த அன்பின் பெயறே பக்தி
வைதேகி கணவன் வருவான் என்று
வனத்தில் தவமிருந்தாள் கிழவி சபரி

கடித்துச் சுவைத்து கனியைக் கொடுத்த
எச்சில் கலந்த அன்பும் அதுவே
சிந்தை அணுவெல்லாம் சிவனேயாக
செருப்பால் உதைத்தது வேடபக்தி
மூடபக்தி சிசுவை சேறு மிதித்தது
முரட்டு பக்தி பிள்ளையைக் கறிசமைத்தது
சித்திரத்தில் சிற்பத்தில் சிலையில் பாவனையில்
தெய்வத்தை லயிப்பது கண்கண்ட பக்தி
செவிகளின் கடமை திருப்புகழ் கேட்பது
கனிந்த பக்திக்கு நெஞ்சம் உருகும்
நுகருகின்ற மணத்திலெல்லாம் தெய்வம் கமழும்
நாக்கு ருசியை மறக்கும் அல்லால்
நாதன் நாமத்தை உறக்கத்திலும் உளறும்
தொழுகையும் தொண்டும் கைகளின் பொறுப்பு
தேவன் கோயிலை வலம் வருவதற்கே கால்கள்
என ஆற்றுகின்ற பக்தி இளைத்ததல்ல
நிலம் கடந்து நிறம் கடந்து மொழி கடந்து முறைகடந்து
உருகுகின்ற பக்திக்கு உருகாத தெய்வமில்லை
தாய்க்கு தன் மகன் அன்பு செய்தாலும்
தாயன்புக்கு மகன் தவித்து நின்றாலும்
அன்னையின் உள்ளம் அவனையே சுழலும்
அன்னையினும் பரிந்து அருளும் தெய்வமடா
முக்திக்கு உரியவழி பக்தி என்று உணர்க
பரவசமாகி நினைத்தவர் என்னைத் தெரிந்தவர்
அவர் இருக்கும் இடத்தில் எல்லாம் இருப்பேன்
அவர் தலைவனென்றால் நான் தொண்டனாவேன்
அவர் கவிஞன் என்றால் நான் எழுத்தாவேன்
அவர் ஆசான் என்றால் நான் சீடனாவேன்
அவர் தகப்பன் என்றால் நான் மகனாவேன்
அவர் தோழன் என்றால் நான் துணைவனாவேன்
மனித குலத்துக்கு என் பணி யுகத்துக்கு
யுகமாக தொடர்கின்றது இனியும் தொடரும்

சாத்திரம் என்பது நாத்திறம் அல்ல
முன்னோர் கண்ட அனுபவ முன்னுரை
பின்னோர் தொடர வகுத்த நல்வழி
என் வழியன்றி உனக்கென்று தனி வழியில்லை
கண்ணன் சொன்னேன் காண்டீபத்தை எடடா
உடல் அழியும் நினைவின்றி யோகி ஆகி
உட் சோதியில் கலந்து நிற்கின்றான் பீஷ்மன்
அறப் போருக்கு தனை மறந்து நிற்கின்றான் தருமன்
நன்றிக் கடனுக்கு கர்ணன் தான் செய்த
புண்ணியத்தை முன் வைத்து போர் கேட்கின்றான்
பொறுமையின் எல்லையில் புழுங்கியது போதுமடா
தருமம் அழியும் இடம்தோறும் தலம் தோறும்
காலக் கணக்கின்றி ஞாலம் காக்க
வந்தேன் வருகின்றேன் வந்துகொண்டே இருப்பேன்
விஜயனே அர்ச்சுனா வில்லினை எடடா
வீரம் பெரிதென்று நாண்கள் அதிரட்டும்
வெற்றி வெற்றி என்றுன் சங்கு முழங்கட்டும்
அரவக் கொடியோன் படையுடன் மாளட்டும்
அறத்தின் திருமகனுக்கு மணிமுடி சூட்டுவோம்
உறுதி சொன்னான் கண்ணன் உணர்வின்
உச்சத்தில் தனை மறந்து நின்றான் தனஞ்செயன்
துயரத்தின் எல்லையிலே துடித்திருந்த கிழவன்
கண்ணிழந்தவன் ஆயினும் கருத்துடன் கேட்கின்றான்

## திருதன்

எழுந்த அலைகள் எழுத்தபடி நின்றதோ
பாய்ந்த வேங்கை பாய்ச்சலை மறந்ததோ
களத்தில் படைகள் அணிவகுத்த பின்னே
காலம் கடப்பதென்ன காரணமோ
சஞ்சயனே என் சஞ்சலம் தீர வழி என்ன:"

### சஞ்சயன்

அச்சம் நமக்கில்லை படை பெரிதினும் பெரிது
பதினெட்டில் பதினொன்று, பாண்டவர்க்கு ஏழே"

### திருதன்

''அச்சுதன் நமக்கில்லை என்பது மறந்தனை
அவன் அருளினும் நமது ஆற்றல் வலிதோ"

### சஞ்சயன்

மாண்பு மிக்க மன்னவனே என் தலைவா
அறிந்திருந்தும் போரை அனுமதித்தது ஏனோ"

### திருதன்

கண்ண பெருமான் தூது வந்தான்
பாண்டு மக்களுக்கு பங்குதர மறுத்தனர்
முடிவில் ஐந்து வீடும் இல்லை என்றனர்
அழியாத வீடு தரும் பெருமகனை அழிக்க
ஆழக் குழி பறித்து சதி புரிந்தார். அறியாமை!
பாசத்தால் நானும் கட்டுண்டேன் வழியில்லை
கண்ணனும் விண்ணளவு வளர்ந்து காட்டினன்
என் கண்கள் ஒளி பெற்றன, கண்ணனைக் கண்டேன்
காரணனை, நாரணனை கண்குளிரக் கண்டேன்
வரதனும் வரம் என்ன வேண்டும் எனக் கேட்டான்
நீண்ட ஆயுளும் நெடிய புகழும்

நீள் புவியும் மக்களேயும் காக்க வேண்டிலேன்
பரம் பொருளே உன்ளேப்பார்த்த கண்களால்
பாவம் நிறைந்த இந்த உலகை
பார்த்துக் கொண்டிருக்க மனம் ஒப்பவில்லை
கொடுத்த கண்களை பறித்துக்கொள் என்றேன்
கும்பிட்டேன் குருடானேன் நீ எனக்குக் கோலானுய்
நான் பெற்ற பிள்ளைகள் என் சொல்லை முறித்தனர்
நல்லதம்பி விதுரன் வில்லை முறித்தான்
விதியும் நம்மைச் சிரித்து நடைபோடுகின்றது

என்று உருகிய வேந்தனை ஆற்றினுன் சஞ்சயன்
தெரிந்தும் தெரியாத மனத்தோடு விஜயன்
கண்ணன் கருணைக்கு முன் கட்டுண்டு நின்ருன்
வீரம் உறங்கிற்ரே வில்லும் வெற்றிரும்பு ஆனதோ
இடதுகை வீரனுக்கு இரங்கினுன் இறைமகன்

## கண்ணன்

சொல்லுகின்றேன் சுக துக்கம் புறத்திருந்து வருவன
ஆன்மாவைத் தொடுவதில்லை உறுத்துவது மனத்தளவே
குளிரும் வெப்பமும் பூதப் பொருள் தருவன
தாக்குவது உடலளவே ஆன்மாவுக்குச் சேதமில்லை
திரிகின்ற புலன்களை அடங்க வைத்து
தியானத்துக்கு வருவாய் தெளிவு பெறுவாய்
ஏது பிழையாயினும் மன்னிப்புண்டு
மனதறிந்த தவறுக்கு மாற்றமில்லை
தானதருமம் அதர்மத்துக்கு திரையுமல்ல
புகழுக்காக கொடுப்பது அறமுமல்ல
ஞானத்தால் அஞ்ஞானத்தை வென்று
மன மடங்குவதே மாபெரும் யோகமாகும்
பக்தியில் சிறந்து ஞானத்தில் தெளிந்து

கருமத்தில் நிற்பது நல்ல யோகம்
தியாகத்திலும் பெரிய தவம் வேறில்லை வேள்வியில்லை
தன்னம்பிக்கையற்று சாவது மூடத்தனம்
தன்னைத் தானே கொன்று கொள்வது கோழைத்தனம்
தன்னலத்துக்காக பிறரைக் கொல்வது மிருகத்தனம்
தற்காப்பில் கலகத்தில் கொலைபுரிதல் மன்னிக்கத்தகும்
நாள் குறித்து இடம்குறித்து களத்தில் நின்று
தன்னிலும் வலியவரை தனக்கு நிகரானவரை
கொல்லுவது கொலையல்ல வீரமென்று சொல்லுவார்
புகழுக்கு உரியது கடமைக்கு உரியது
சாத்திரம் தடுப்பதில்லை சரித்திரம் மறுப்பதில்லை
இலக்கணம் வகுப்பது இலக்கியம் படைப்பது
சிரித்த முகத்தோடு செந்தூரத் திலகமிட்டு
சென்று வருக வென்று வருக என்றே
வாழ்த்தி அனுப்புவாள் வாழ்க்கைத் துணைவி
தீமையை அழிக்கச் சொல்லி நல்லோர் வாழ்த்துவர்
நலத்துக்கு ஆன போர் தியாக வேள்வி
தேவருக்கு உரிய ஓமத்தினும் பெரியது
அறப்போர் அறப்போர் வாய்த்தது உனக்கே
முடிவு தெரியும் முடிக்கவும் தெரியும்
மூன்று குணத்துக்கு உரியவரும் இருக்கின்றார்
முதற்குணத்து பீஷ்மனை தருமனை வணங்கிக்கொள்
ஆற்றல் மிக்க ஆசார்ய துரோணர்
அன்புக்கு இனிய நின்மகன் என்மருகன் அபிமன்யு
கொடுத்து கொடுத்து கரம்சிவந்த கர்ணன்
ஆண்மைக்கு வலிய அர்ச்சுனன் நீயும்
இரண்டாம் குணத்தவர் இருக்கின்றீர் புகழுக்கென்றே
துரியோதன துச்சாதன பீமர்கள்
போர் போரென்ற வெறியொன்றே அறிவார்
மூன்றும் குணத்தவர் முடிவுக்கு வந்தவர்
தடுப்பதற்கில்லை தருமம் பிழைக்க வேண்டும்
கருமத்தின் விதி நடத்தும் வழி இதுவே
கலக்கமும் தயக்கமும் இனி உனக்கு வேண்டாம்

தியானத்தில் நின்று என்னைப் பார்தெரிவேன்
முனிவருக்கும் தேவருக்கும் மூலம் நானே
திரண்ட பொருள் அனைத்தும் கண்ணன்
தெரிகின்ற தோற்றமெல்லாம் கண்ணன்
சிறந்ததில் சிறந்ததும் நானே ஆவேன்
தெய்வங்களில் சங்கரன் தேவிகளில் பராசக்தி
தேவர்களில் இந்திரன் முனிவர்களில் நாரதன்
வேதங்களில் சாமம் நாதங்களில் பிரணவம்
மன்னர்களில் ஜனகன் மந்திரியில் விதுரன்
செல்வர்களில் குபேரன் வள்ளல்களில் கர்ணன்
வீரர்களில் விஜயன் வில்லிலே காண்டீபம்
சத்தியத்தில் அரிச்சந்திரன் சாத்திரத்தில் சகதேவன்
சேவையில் அனுமான் சேனாபதிகளில் கந்தன்
கவியினிலே வால்மீகி புவியினிலே தமிழ்நிலம்
மலைகளிலே இமயம் நதிகளிலே கங்கை
தலங்களிலே திருமலை தளங்களிலே வில்வம்
மரங்களிலே அரசு மலர்களிலே மல்லிகை
காலங்களில் இளவேனில் மாதங்களில் மார்கழி
ஏழைகளில் குசேலன் எஜமானரில் துரியோதனன்
துயரினிலே குந்தி சூழ்ச்சியிலே சகுனி
மருந்தினிலே துளசி மந்திரத்தில் நாராயணாய
என்று தனக்கினிய அம்சங்களைச் சொன்னான்.

## காண்டீபன்

"பெரியவனே மாயவனே பேருலகைப் படைத்தவனே
பெருமைக்குரிய அனைத்தும் நீ என்ற பின்னே
துயருக்கு என் அன்னையைச் சொன்னதென்ன?"

**கண்ணன்**

பாஞ்சாலியைப் பரிசாக நீ கொண்டு வந்தாய்
தருமம் சங்கடப்பட்டது. தாயும் சஞ்சலப்பட்டாள்
தியானத்தில் என்னை அழைத்தாள் தேற்றினேன்
''மூத்தவனுக்கு முந்தானை விரிக்கும் தலைவி
இளையவனுக்குப் பிள்ளை பெற்றெடுப்பாள்
பாஞ்சாலர் குலத்துப் பரம்பரைப் பழக்கம்
தவறன்று நின் தனையர் ஐவருக்கும் அவள் பொதுவே''
என்றதற்கு இசைந்தாள். எது வேண்டும் கேள் என்றேன்.
''நீரில் மிதக்கத் தெப்பத்திலிருக்க வேண்டும்
தெய்வ நினைவோடிருக்க துக்கம் வேண்டும்
அருளுக'' என்றாள். அவள் துயரின் தொடர்கதை
இன்றைய போராக மூண்டு நிற்கின்றதடா''

**காண்டீபன்**

''சாரங்கனே நான் வென்ற சங்கரனே
தளங்களிலே வில்வத்துக்கு என்ன தனி சிறப்போ?''

**கண்ணன்**

சங்கரன் ஆலகாலம் உண்டான்
விஷ நாகங்களே சங்கராபரணங்கள்
விஷத்துக்கு முறிப்பு சிவத்துக்கு அர்ச்சனை
வில்லாளனே வில்வம் அதனால் உயர்ந்ததடா''

## காண்டீபன்

"மகத்துவமே மருத்துவத்துக்கு தன்வந்திரி
நீ என்ருல் துளசி மசத்தானது எப்படியோ?"

## கண்ணன்

"என்னைத் துதிப்பவர் தன்வினைக்குத் தவமிருப்பார்
அவர் வினை அறுக்கும் போது அவர் நோயும் ஏற்பேன்"
அடியவர் பிணிகளை அனுபவிக்கும் பொறுப்பெனக்கே
திருத்துழாய் மாலையாகி மருந்தாகின்றதடா
உண்ணுவது கண்ணன் உணவும் கண்ணன்
என்பதை உணர்த்தவே அன்று கோகுலத்தில்
வெண்ணெய் உண்ட வாயால் நானும்
மண்ணை உண்டு காட்டினேன் என் வயிற்றில்
அன்னை யசோதை அண்டங்களைக் கண்டாள்"

## காண்டீபன்

"அனைத்தும் உன்னுள் ஒடுக்கம் என்ருல்
புண்ணியனே இந்தப் புண்ணுகும் போரெதற்கோ
மண்ணுள வந்தோம் மனதாளவில்லை.
உன்மத்தம் ஆகுதய்யா உண்மை என்னவோ?"

## கண்ணன்

"அன்பனே நீ அறிந்தது கொஞ்சம்
அறிய வேண்டியது மிக அதிகம்
ஆதலின் அகமும் புறமும் தூய்மையாகி
நினைவும் உணர்வும் சொல்லும் செயலும்
எனக்கே ஆக்கி தியானத்தில் ஆழ்ந்துபார்".
என்றே காண்டீபனுக்கு அருளினன் கண்ணன்

## காண்டீபன்

"கண்ணப் பெருமானே மணிவண்ணப் பெருமானே
ஒன்ருய் பலவாய் உருவாய் திருவாய்
எனையாளும் தெய்வமே இறைவனே திருமாலே
போதனையில் ஒருகணம் புத்தி தெளிகின்றேன்
மறுகணம் மயக்கத்தில் ஆழ்கின்றேன் மன்னிக்க.
தோழனும் துணைவனும் தொண்டனும் தலைவனும்
குருவும் உறவும் ஆன என் கோவிந்தா
அணுவினும் அணுவாகி அண்ட போண்டமாகும்
நினைதரிய பெரிதினும் பெரிதான திருவுருவை
தெரியக் காட்டி என்னைத் தெளிவிப்பாயே."
என்று கண்ணன் கழலடியைப் பற்றினன்

ஊனக் கண்கொண்டு ஒளி வடிவைக்காண
இயலாதென்று கண்ணன் ஞானக்கண் கொடுத்தான்
பரம்பொருளும் பெரும்பொருள் ஆனது.

எழுத்தில் எழுதரிய பேருருவை எழுதவோ
மனத்தில் வரித்தபடி வழுத்துகின்றேன்

நூறு நூறு சூரியர்கள் ஒன்ருகி
நின்றெழுந்த ஒளிப்பிழம்பு திருமுகம் ஆக
ஞாயிறும் திங்களும் திருவிழி மலர்களாக
விண்ணுக்கு மேலெல்லே கரிய முடியானது
திரண்டெழுந்த தோளிரண்டும் இமயமோ விந்தியமோ,

கண்களிரண்டில் சுரந்து வந்த
கருணை வெள்ளம் கங்கையோ காவிரியோ
அந்திச் செவ்வானம் பவள வாயிதழ்களோ
உள் வாங்கி உயிர்த்துவிட்ட சிறுமூச்சு
தென்றலென்ருல் நெடுமூச்சு பெரும்புயலோ
நீலக்கடல் பரப்பு நெடுமாலின் திருமார்பே
அண்டபேர் அண்டங்கள் அடிவயிருே
வான் சுமக்கும் தூண்களே வலிய கால்கள்
நெடுங்கரங்கள் நீள்புவி அளக்கும் கோல்கள்
வில்லென்று வேலென்று வாளென்று சொல்லுகின்ற
படைவரிசை இறைவன் திருவிரல் அணிகளோ
இந்திர ருத்திர கிம்புரு நாரத

வருணன் யமன் வாயு உள்ளிட்ட
தேவர்கள் திருமாலின் அலங்காரப் பொருளாயினர்
ரிஷிகள் திருத்துழாய் மாலையில் இடம் பெற்றார்
அனந்தனும் வாசுகியும் அளப்பரிய பெருமாளின்
மணிமார்பில் புரளும் தாவடங்கள் ஆயின
வானத்து ஒளிச்சுடர்கள் வைரமணி மாலையாக
ஆயிரம் ஆயிரம் தாமரைகளைக் கொண்டு
தேவனின் திருப்பாத கமலங்கள் ஆனதோ
பிரளயத்தின் பேரிரைச்சல் வெறிச்சிரிப்பாக
இடி முழக்கம் கடுங்குரல் ஆனது
பிரணவத்தின் நாதம் ஓங்காரம் ஆக
யாழும் குழலும் அமுத மொழியானது
வளர்ந்தது திருமேனி வளர வளர
உயர்ந்தது ஒளிப்பிழம்பு உயர உயர
அடியும் முடியும் அறிய முடியுமோ
ஹரி ஹரி என்றது கடலின் ஓசை
ஓம் ஓம் என்றன உலகத்துக் குரல்கள்
காற்றும் பாடிற்று வானும் எதிரொலித்தது
கண்ணா கண்ணா என்பதற்கு மேலொன்றில்லை
காண்பதற்கு இனிவேறு காட்சியில்லை
கேட்பதற்கு இனிவேறு பெயரில்லை
கருணைக்கு இனி வேறு தெய்வமில்லை
விஜயன் மெய்மறந்தான் விழிகளும் பேசிற்று

## காண்டீபன்

கண்ணனைக் கண்டேன் காலத்தை வென்றேன்
அண்ணலைக் கண்டேன் அனைத்தும் ஆனேன்
மாயவனைக் கண்டேன் மாயையைக் கடந்தேன்
பரம் பொருளைக்கண்டேன் பரத்தில் கலந்தேன்
திருவருளே பெருங்கருணைக்கடலே நாரணா
இனியானென்று இல்லை நினது நிழலானேன்
என் விதியும் வேதமும் நீயன்றி வேறில்லை
பிறவிக்குப் பெரும்பயன் நின்பெரிய திருமேனியை
கண்டதற்கு மேலாக சொர்க்கம் ஒன்றுண்டோ
சுகதுக்க மரணம் இனி எனைத் தீண்டுமோ
உட் சோதியிற் கலந்தேன் ஓம் ஓம் நாரணா
போதும் இந்த பெரிய திருக்கோலம்
உலகத்து உயிரனைத்தும் நடுங்கக் காணுகிறேன்
போர்ப்படைகள் உன்னுள் ஒடுங்க காணுகிறேன்
"கண்ணா கார்வண்ணா கமலக் கண்ணா
மனித வடிவத்துக்கு மாலே வருக
சங்கு சக்கரம் தரித்த தாமோதரா
கோவிந்த கோபால அச்சுதனக வருக"

வேண்டினன் விழுந்தான் எழுந்தான் வணங்கினன்
பரம் பொருளும் பார்த்தசாரதி ஆனன்
பாஞ்ச சன்யம் பஞ்சவருக்காக முழங்கிற்று
விஜயன் வில்லேந்தினன் வீரர் ஆரவாரித்தனர்

அனுமக் கொடி அசைந்தது, ஆனே பிறந்தது
உறை கிடந்த வாட்கள் ஒளி வீச்சில் மின்னின
நாண்கள் அதிர்ந்தன, நாரணன் நகைத்தான்
போருக்கும் புகழுக்கும் சரங்கள் மழை பொழிந்தன
ஈட்டிக்கு மார்காட்டி வாளுக்குத் தோள் கொடுத்து
போர் மகளை பொங்கும் ரத்தத்தால் முழுக்காட்டி
பார் மகளின் வயிற்றுக்கு தன்னுடலை இரைகொடுத்து
புகழ் மகளின் எட்டுக்குத் தங்கள் பெயர் கொடுத்து
வருகின்ற வீர மறவர்க்கு இடம் கொடுக்க
சொர்க்கத்தின் திருக்கதவம் திறக்கப்பட்டது
தரும க்ஷேத்திரம் குரு க்ஷேத்திரமாகத் தழல்பட்டது

## காண்டீபன்

நாரணனே நான் வணங்கும் ஞானகாரணனே
ஐயம் தெளிந்தது அச்சம் தீர்ந்தது
பாசம் விலகிற்று மனபாரம் தீர்ந்தது.
மோகம் தீர்ந்தது யோகம் வளர்ந்தது
வீரம் வீரம் என்றே நாடி அதிர்கிறது.
வெற்றி வெற்றி என்றே மூச்சு அயிர்க்கின்றது
சாரதியே என் ரதத்தை விரைந்து நடத்து.
இந்தப் பாரின் அதத்தை நான் நடத்துகின்றேன்

அவன் வில்லிலே பிறந்த நாதம் வீரம் பாடிற்று
சங்கிலே எழுந்தது மத்திர முழக்கம்

நமோ நாராயணய, நமோ நாராயணய
சஞ்சயனும் கிழவேந்தனுக்குச் சொன்னன்
வேத வியாசன் முடி போட்டுச் சொல்ல
பிரணவப் பிள்ளையும் இமயத்தில் எழுதினன்
பக்திச் செல்வம் இது பகவத் கீதை
வணக்கத்துக்கு உரியது. வணங்குதும் யாமே
வாழ்வுக்கு உரியது போற்றுதும் போற்றுதும்
கண்ணன் திருவடிக்கே எண்ணம் சொல் செயல்
என்னையும் காணிக்கை ஆக்கினேன் வாழ்க.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | தவறு | சரியானது |
|---|---|---|---|
| 6 | 3 | புத்தக | புத்தக் |
| | 25 | சத்தியத் | சத்தியச் |
| 7 | 5 | குளம்படிக்கு | குளம்படிக்குக் |
| 8 | 25 | ராஜபோகம் | ராஜயோகம் |
| 9 | 6 | களைத்து | களைந்து |
| | 11 | வில்லெடுக்க | வில்லெடுக்கச் |
| 14 | 13 | சக்தியும் | சகதியும் |
| 16 | 6 | வணிகராவார் | வணிகரவர் |
| 17 | 22 | கணவர் | கணவன் |
| 18 | | கான்டீபன் | காண்டீபன் |
| | 7 | எனக்கு | எனக்குத் |
| 19 | 4 | மறைத்தும் | மறைத்து |
| | 14 | கட்டத்தேரியாத | கட்டத்தெரியாத |
| 20 | 10 | மூடிகிடக்க | மூடிக்கிடக்க |
| 22 | 6 | அவனேயர்வான் | அவனேயாவான் |
| | 27 | இறைவனை | இறைவனைப் |
| | 30 | தொடாந்து | தொடர்ந்து |
| | 31 | பெயறே | பெயரே |
| 23 | 4 | செறுப்பால் | செருப்பால் |
| | 19 | மசுன் | மகன் |
| | 24 | தெரிந்தவ | தெரிந்தவர் |
| | 25 | இருப்பேன்ர் | இருப்பேன் |
| | 30 | துனைவனாவேன் | துணைவனாவேன் |
| 24 | 12 | தோரும் | தோறும் |
| | 19 | சூட்டுவோம | சூட்டுவோம் |
| | 25 | பாய்ச்சலை மறந்ததோ | பாதியில் நின்றதோ |
| 25 | 8 | மக்களுக்கு | மக்களுக்குப் |
| 26 | 10 | வேந்நனை | வேந்தனை |
| 29 | 5 | இனையவனுக்குப் | இளையவனுக்குப் |
| 31 | 7 | கண்ணப் | கண்ண |
| | | பெருமானே | பெருமாளே |
| | 12 | தொண்டணும் | தொண்டனும் |
| | 14 | போண்டமாகும் | பேரண்டமாகும் |
| 32 | 6 | தூறு | நூறு |
| | 12 | கருனை | கருணை |
| | 16 | நீலக் கடல் | நீலக் கடற் |
| 33 | 22 | கருனை | கருணை |
| 35 | 1 | ஆனை | ஆணை |
| | 3 | நாண்கன் | நாண்கள் |
| | 10 | திருக்கதவும் | திருக்கதவம் |
| | 21 | மத்திர | மந்திர |
| 36 | 1 | நாராயனாய | நாராயணாய |

அச்சிட்டோர் :

ஏ. கே. வேலன் அன் சன்ஸ்

24, அருணாசலம் சாலை, சாலிகிராமம்

சென்னை-600 093